www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 16

දිනමුරසු සතියේ පුවත්පත

6-12, 06.1993

ரூபா 8/50


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 2

## உள்ளே



சி னி வி சி ட்





## புலிகள் வகுத்துள்ள புதிய திட்டங்கள்



## முத்தான சிறுகதைகள் மூன்று

## இரு பிரதமர்களின் புதல்வி ஒரு முதல்வர்

## பாப்பா முரசு

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இது
இரண்டாவது அடி எடுத்து வைப்பு.
ஆரம்பமே அமோகம்.
காரணம்,
உங்கள் உற்சாகமான வரவேற்பு.

எதையாவது புதிதாகச் செய்து கொண்டிருக்க வேண்டும்
என்கின்ற தாகமும்-வேகமும்
எமக்குண்டு. நிறையவே உண்டு.

எனவே, ஒவ்வொரு முரசமும்
உங்களை அசத்தும்,
இனி-இங்கே-
தினமுரசின் பாணியே
ஆதிக்கம் செலுத்தும்.
உங்கள் அன்பு மட்டுமே
முரசை வளர்க்கும். ■

மாகாணசபைத் தேர்தல்கள்
நாட்டு மக்களின்
நாடித் துடிப்பைச் சொல்லி இருக்கின்றன.
ஆளும் கட்சிக்கு-
நகர்ப்புறங்களில் அடி விழுந்திருக்கிறது.
எதிரணிக் கட்சிகளுக்கு-
கிராமப் புறங்களில் விழுந்திருக்கிறது அடி.
தனிக்கட்சி ஏக போகத்திற்கு
இனி இடமில்லை என்றே தோன்றுகிறது.
ஜனநாயகம் வலுப்பட
அதுவும் அவசியம் தான். ■

இனிமேல்- ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும்
அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும்.
மக்களின் நம்பிக்கையைப் பெற
அவசரப் பிரச்சினைகளுக்கு
தீர்வுகளையும், திட்டங்களையும்
முன்வைக்க வேண்டி இருக்கும். ■

ஜனாதிபதியின் அணுகுமுறைகள்
நம்பிக்கையூட்டுவதாக இருக்கின்றன.
மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது,
எளிமையை முன்னிறுத்துவது,
ஆரவாரமான அரசியலை
புறந்தள்ளி-
அடக்கமான ஆனால் தீர்க்கமான
முடிவுகளோடு முன் செல்வது,
என்பவை தான்-
அவரது அணுகுமுறைகளாக இருக்கின்றன. ■

இனப்பிரச்சினைக்கு
தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை
ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும்
புரிந்து கொண்டால் மட்டும் போதாது,
கண்ணாமூச்சி விளையாட்டுக்களும் கூடாது.
துணிச்சலான-நேர்மையான
அணுகுமுறைகளை
அவர்களிடம்
நாடு எதிர்பார்க்கிறது.

அன்புடன்,
ஆசிரியர்.


தினமுரசில்
விளம்பரம்
செய்யுங்கள்
வியாபாரத்தைப்
பெருக்குங்கள்
தொலைபேசி இல:
820265


## முகவரிக் கூப்பன்கள்

தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
கவிதைப் போட்டி
88/14, சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
மாணவர் முரசு
88/14, சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
வாசகசாலை
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
புகார் பெட்டி
88/14, சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-5.

தினமுரசு வாரமலர்
சிந்தியா பதில்கள்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5.

## கவிதைப் போட்டி



மேலே உள்ள படத்தைப் பார்க்கும்போது உங்கள் உள்ளத்திலே உற்பத்தியாகும் எண்ணங்களை பதினைந்து வார்த்தைகளுக்கு மேற்படாத கவிதை ஆக்கி எமக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றிற்கு சிறப்புப் பரிசாகப் புதிய திரைப்படப் பாடல் கசெட் ஒன்று காத்திருக்கிறது.

கடந்த வாரம் தினமுரசில் இடம்பெற்ற வாசகர் போட்டிகளுக்கான விடைகள் இம்மாதம் 10ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்க வேண்டும். இம்முறை இடம் பெற்றுள்ள போட்டிகளுக்கான விடைகள் இம்மாதம் 12ம் திகதிக்கு முன்னர் கிடைக்க வேண்டும்.

# நான் ஏன் எழுதுகிறேன்

நிர்மலா சுரேஷ்

எழுதாமல் இருந்தால், என்
இதயம் தவிக்கிறது;
எண்ணம் துடிக்கிறது.
பிறந்த மண் புண்பட்டால்
கைப் பேனா மை கசிகிறது.
மானுடம் காயப்பட்டால்- பாழும்
மனசு பதைக்கிறது.
நேசம் உணர்கையிலே
நெஞ்சம் நெகிழ்கிறது - அதைக்
கவிதையிலே சொல்லத்தான்
காலை விடிகிறது.
ஒரு பக்க எழுத்துத்தான்;
ஒரு லட்சம் உள்ளங்களோடு
உறவாடும் வாய்ப்பன்றோ?
இந்தயிப் பிறவிக்கு
இது ஒரு பேறு போதாதா?
இலக்கியம் என்னைத் தன்
கையிலெடுத்துக் கொஞ்சுகிற
அரவணைப்பில் எனைமறப்பேன்;

பௌர்ணமி தினம் கேட்கும்
பேராசைக்காரி நான்
ஓசையில்லாக் கடல் பார்க்க
விழைகின்றேன் - நடக்குமா?
விந்தைகளைக் கவிதையில் தான்
படைத்துப் பரவசமடைவேன்.
என் தமிழே, உனை நான்
எழுதுகையில் அவதாரம்
ஆயிரம் எடுக்கிறேன்.
பூவாய், பூகம்பமாய்
தேனாய், மருந்தாய்
நீராய், நெருப்பாய்
காதலாய் கோபமாய்
உணர்ச்சியாய் அறிவாய்த்
துலங்குகிறேன் நான்;
இயற்கையாயிருக்கிறேன்-
செயற்கையாய் மட்டும் அல்ல.



இறக்குமதிச் சிரிப்பு

## கொலையாளியோடு தொடர்பா? மோதிலால் நேரு மீது விசாரணை?

பிரபல சட்டத்தரணியான திரு. மோதிலால் நேரு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை குறித்து விசாரணை நடத்தும் விசாரணையாளர்களால் விசாரிக்கப்பட்டதாக கனடா பத்திரிகையான தாயகம் தெரிவித்துள்ளது.

திரு. மோதிலால் நேரு மாகாணசபைத்தேர்தல்களுக்கு சில வாரங்களுக்கு முன்னர் தான் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து கொண்டார். அதற்கு முன்னர் அவர் தமிழ்க் காங்கிரசில் அங்கம் வகித்தார்.

திரு. மோதிலால் நேரு பிரபாகரனது சொந்த ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். தமிழ் நாட்டில் நடைபெறும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அவர் ஆஜராகப் போவதாக கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.

### யாழ் குடாநாட்டில் பரவும் புது வித நோய்

## ஏழு சிறுவர்கள் மரணம்

யாழ் குடாநாட்டில் பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களைப் புதுவித நோய் ஒன்று தாக்கி வருகிறது. ஹெப்டதேமியா என்று வைத்தியர்கள்அதற்குப் பெயரிட்டுள்ளனர். இது வரை அந்த நோய்க்குக் காரணமான கிருமிகள் யாதென்று கண்டு பிடிக்கப்படவில்லை.

யாழ் பொது மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நோய்க்கான காரணத்தைக் கண்டறியும் போதிய வசதிகள் இல்லையென்று கூறப்படுகிறது.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் அந்த நோயின் தாக்கத்தால் யாழ் வைத்தியசாலையில் ஏழு சிறுவர்கள் மரணமடைந்துள்ளனர். மேலும் பல சிறுவர்கள் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அந்நோயால் கடும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இரத்தம் வழங்க யாழ் இரத்த வங்கியில் போதிய இரத்தம் இல்லை என்றும் குறிப்பாக 'ஓ பொஸிட்டிவ்' இரத்தம் பற்றாக்குறையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் புதுவித நோய்க்கான அறிகுறிகள் பின்வருமாறு;
• கறுப்பு நிறமான வாந்தி எடுத்தல்.
• மலத்துடன் இரத்தம் போதல்.
• காய்ச்சல்.
• வயிற்று நோ.

### எய்ட்ஸ் கல்வி

குருநாகல் மாவட்டத்திலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் மாணவர்களுக்கு எய்ட்ஸ் நோய் பற்றி போதிக்கப்படவுள்ளது. இதற்கு தேவையான நடவடிக்கைகளை வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

செஞ்சிலுவைச்சங்கம், சுகாதாரப் பகுதி ஆகியவற்றுடன் இணைந்து இதற்கான கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. (விசிநவ உதுமான்)

### தகவல் இருந்தால்.....

கொழும்பில் சந்தேகப்படும்படியான நபர்கள் கறித்து தகவல் அறிந்தால் தம்மிடம் உடனடியாகத் தெரிவிக்கும்படி பாதுகாப்பு படைத் தலைமையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# அமைச்சர் தொண்டா மீது கண்டனம் பாலகுமார் தீட்டியுள்ள கட்டுரை

## மலையக மக்கள் முன்னணிக்கு பாராட்டு! புலிகளைத் தொண்டா பயன்படுத்துகிறாராம்!!

இ.தொ.க. தலைவரும், அமைச்சருமான சௌமியமூர்த்தி தொண்டமான் இனப்பிரச்சனைத் தீர்வுக்குப் புலிகளின் அபிப்பிராயத்தை அறிவதில் நாட்டம் காட்டி வருபவர். இனவாத சக்திகளினால் அவரது முயற்சிகளுக்குப் பலத்த எதிர்ப்பு தொடுக்கப்பட்டது. அமைச்சர் தொண்டமானின் முயற்சிகளுக்கு புலிகளின் தரப்பில் இருந்து உற்சாகமான ஆதரவு கிடைத்ததாகச் சொல்ல முடியாது.

அமைச்சர் தொண்டமானின் அரசியல் பலமும் அதனைச் சார்ந்த நிலைப்பாடுகளும் தமிழர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளன என்பதில் ஐயமில்லை.

புலிகள் அமைப்புக்கெதிரான தமிழர் அமைப்புக்கள் ஒரு விடயத்தை அடிக்கடி வலியுறுத்திக் கூறுவதுண்டு. தம்மைத் தவிர வேறு எவரும் தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதைப் புலிகள் விரும்புவதில்லை. அந்தக் கூற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறதோ இல்லையோ அமைச்சர் தொண்டமான் விடயத்தில் அது உண்மையாகி இருக்கிறது.

ஒருபுறம் அமைச்சர் தொண்டமானின் முயற்சிகளுக்குத் தாங்கள் தடையில்லை என்று அவருக்குக் கடித மூலமாக அறிவித்துள்ள புலிகள் மறுபுறம் யாழ்ப்பாணத்தில் அவருக்கு எதிரான பிரச்சாரத்தைப் பத்திரிகைகள் வாயிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் புலிகள் இயக்கத்தின் சொந்தப் பத்திரிகையான ஈழநாதத்தில் முன்னாள் ஈரோஸ் இயக்கத் தலைவரும், தற்போது புலிகள் இயக்கத்தின் தத்துவார்த்தப் பிரச்சாரகராகவும் விளங்கும் திரு.வே.பாலகுமார் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். தலைவர் பிரபாகரனுக்கு தொண்டா விடும் தூது என்பது தான் அக் கட்டுரையின் தலைப்பு ஆகும். அந்தக் கட்டுரை புலிகள் இயக்கத்தால் கனடாவிலிருந்து வெளியிடப்படும் உலகத்தமிழர் பத்திரிகையில் 01.03.93 அன்று மறு பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது.

அதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அமைச்சர் தொண்டாவுக்கெதிரான பிரச்சாரத்தை விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வருவது புலனாகின்றது.

திரு.வே.பாலகுமார் எழுதியுள்ள அக்கட்டுரையில் இ.தொ.க.வில் உள்முரண்பாடுகள் நிலவுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

**அக்கட்டுரையின் சில பகுதிகள் பின்வருமாறு:**

சிறீ லங்காவின் அரசியல் வானில் நிரந்திர இரட்டை வேட நட்சத்திரமாகத் திகழ்பவர் திரு. தொண்டமான். மலையகத்தில் ஏனைய தமிழர் அமைப்புக்கள் உட்புகமுடியாமல் இந்திய பலம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவுகள் மூலம் ஒரு வேலியினை ஏற்படுத்தினார்.

1977ம் ஆண்டுத் தேர்தலில் நுவரெலியா, மஸ்கெலியா, தேர்தல் தொகுதியில் இவர் மூன்றாவது எம்.பி.யாக வருவதற்கு ஆறாயிரம் வடக்கு கிழக்கு தமிழரின் பத்தாயிரம் வாக்குகளில் (ஒருவருக்கு மூன்று வாக்கு) கணிசமான பங்கு இவருக்குச் சென்றதே காரணம். இத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி இவரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தது. தேர்தல் முடிய கூட்டணித் தலைவரான இவர் அமைச்சரானார். இன்னொருவர் எதிர்க்கட்சித் தலைவராகும் அவலம் நேர்ந்தது.

முன்பு இ.தொ.க. விலிருந்து வெளியேறியவர்களால் தொண்டமானை அசைக்க முடியவில்லை. ஆனால் இன்று நிலை வேறு. இ.தொ.க. இழந்த தலைவர்களில் ஒருவரான சந்திரசேகரன் வெறுமனே தொழிற்சங்க ரீதியில் மட்டுமன்றி, மலையக மக்களின் தேசிய நலன், தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்த ஆர்வம், ஆர்வம் மட்டுமல்லாமல் செயற்பாடுகளையும் கொண்டிருக்கிறார்.

ஐ.தே.க.விலிருந்து விலகிய காமினி தொண்டமானின் பரம வைரியாவார்.

1981ல் தொண்டமான் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்த பின்னர் அவரது கட்சியின் உறுப்பினர் பலர் குறைந்து விட்டனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் உலகம் வியக்கும் சரித்திரத்தைத் தமிழர் படைத்தே தீருவார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. நல்லதோர் வருங்காலத்தை நோக்கி இக்கடிதத்தை அனுப்பி வைக்கிறேன்" என்கிறார். இம்மடல் தொண்டாவின் பெரும் அரசியல் நடவடிக்கை ஒன்றின் பெரும் வெளிப்பாடாகும். காலத்திற்குக் காலம் அவரது அரசியல் வாழ்வில் புயல்கள் வீசியபோது அவர் கையாண்ட அணுகுமுறைகளை அறிதல் மூலமே அவரது தற்போதைய அரசியல் நகர்வினைப் புரிய முடியும்.

சரிந்து வரும் தனது சாம்ராஜ்யத்தைக் கட்டிக்காப்பதற்குத் தமிழீழ அரசியலில் தீவிர அக்கறை காட்டிவரும் தொண்டமான் அதற்குத் தலைவர் பிரபாகரனை ஒரு துரும்புச் சீட்டாக முனைகிறார் போலும். அவரது இக்காய் நகர்த்தலை புலிகளும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

அக்கட்டுரையின் வேறு சில பகுதிகள் நாகரீகம் கருதித் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

பாலகுமாரின் கட்டுரையில் காணப்படும் கணிப்பு தவறானது என்பதை கடந்த மாகாண சபைத்தேர்தல் தெளிவு படுத்தி இருக்கிறது. விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் கூறுவது போல் அமைச்சர் தொண்டமானின் சாம்ராஜ்யம் சரிந்து விடவில்லை. பலமான கோட்டையாகி இருக்கிறது.

### பிரபா பரிசு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே.பிரபாகரன் "இது எங்கள் தேசம்" வீடியோ படத்திற்கு பரிசு வழங்கியுள்ளார். புலிகள் அமைப்பினர் தமது பிரச்சாரங்களுக்காக வீடியோ படங்களைத் தயாரித்து வெளியிட்டு வருகிறார்கள். ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் அவை காண்பிக்கப்படுகின்றன.

### தமிழ்படும் பாடு! சிறைச்சாலை காலி !!

தென்னிலங்கையில் சில பகுதிகளில் தமிழ் மொழி பெயர்ப்புகள் தவறான அர்த்தங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

தமிழ் மொழி பெயர்ப்புகளில் ஏற்படும் தவறுகளைத் தமிழை ஆர்வத்தோடு கற்று வரும் சிங்கள மக்கள் சிலரும் சுட்டிக் காட்டிக் கவலை தெரிவிக்கின்றனர்.

காலி மாவட்டத்திலுள்ள சிறைச்சாலையில் காலிச் சிறைச்சாலை என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக சிறைச்சாலை காலி என்று எழுதப்பட்டிருக்கிறது.

அம்பலாங்கொடயில் உள்ள மரக்கூட்டுத்தாபனத்தில் பரக் கூட்டுத்தாபனம் என்ற வாசகம் காணப்படுகிறது.

(அரூஸ்)

### ஜெர்மனி உதவி யாழ் வைத்தியசாலைக்கு!

யாழ்ப்பாணம் பொது மருத்துவ மனையில் மருத்துவக் கருவிகள் சில நீண்டகாலமாகப் பழுதடைந்த நிலையில் இருப்பதாக யாழ் வைத்தியசாலை நிர்வாகம் கூறியுள்ளது. அங்கிருந்த எக்ஸ்ரே கருவி ஒன்று நீண்டகாலமாகப் பழுதடைந்திருந்தது.

இப்போது ஜெர்மனியின் நிதியுதவி மூலம் யாழ் பொது மருத்துவமனைக்கு எக்ஸ்-ரே கருவி ஒன்று வழங்கப்படவுள்ளது.

## பழைய பாடல்- புதிய பாடகர்! புலிகளின் ஆங்கில வார இதழ் தெரிவிப்பு!!

யாழ்ப்பாணத்தில் புலிகள் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றை வெளியிட்டு வருகிறார்கள். அதற்கு 'ஹொட் ஸ்பிரிங்' (வெப்பமான ஊற்று) என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

கடைசியாக வெளிவந்துள்ள ஹொட் ஸ்பிரிங் தீட்டியுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவை விமர்சித்துள்ளது. பழைய பாடல், புதிய பாடகர். இதுதான் ஆசிரியர் தலையங்கத்தின் தலைப்பு.

புதிய ஜனாதிபதியாக டி.பி. விஜேதுங்க பொறுப்பேற்றுக் கொண்டது முதல் புலிகள் அமைப்பினர் அதிருப்தியான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றனர்.

புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை வெளியிடும் முக்கிய நோக்கம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மற்றும் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுக்குத் தமது நிலைப்பாடுகளை விளக்கும் முக்கிய ஆவணமாக வழங்குவதற்கேயாகும்.

ஹொட் ஸ்பிரிங்கின் முக்கியமான தயாரிப்பாளர்கள் திரு. அன்ரன் பாலசிங்கம். திருமதி. அடேல் பாலசிங்கம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தேன் மதுரத் தமிழோசைக்குப் பதிலாக, தேவையற்ற வெடியோசைகள்!

## கனடாவைக் கலக்கும் இலங்கைத் தமிழர்களின் வெடியோசைகள்!

சமீப காலத்தில் கனடாவில் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உள்ள சில குழுக்களுக்கிடையே மோதல்கள் வெடித்து வருகின்றன. மோதல்கள் என்றால் சாதாரண மோதல்கள் அல்ல. ஆயுதம் ஏந்திய மோதல்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் இரு குழுக்களுக்கிடையே கடுமையான மோதல் நடந்தது. ஸ்காபுரோ நகர வீதிகளில் தாக்குதல்களும் துப்பாக்கி முழக்கங்களும் கனடியர்களைக் கதிகலங்க வைத்தன.

கனடிய பொலிஸ் துரிதமாகச் செயற்பட்டு மோதலில் சம்பந்தப்பட்ட முக்கியமான நாலு பேரைப் பிடித்தது. ஆயினும் கனடிய சட்டத்தின் நெளிவு சுளிவுகளைப் பயன்படுத்தி அந்த நான்கு பேரும் பிணையில் வெளியே வந்தனர்.

அந்த மோதலுக்குக் காரணம் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்களுக்கிடையிலான பிணக்குகள் ஆகும்.

அந்த மோதலின் சூடு சற்றுத் தணிந்த போது ஸ்காபுரோ நகரில் ஒரு கொலை. கடந்த மே 2ம் திகதி ஸ்காபுரோ நகரில் பொதுத் தொலைபேசி நிலையம் ஒன்றிற்கு அருகில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவரின் சடலம் காணப்பட்டது.

கொலையுண்ட இளைஞரின் பெயர் சிவப்பிரகாசம் நமச்சிவாயம் என்று கூறப்படுகிறது. யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். 23 வயதான அந்த இளைஞரின் உடலில் முகத்திலும் வயிற்றிலுமாக ஐந்து குண்டுகள் பாய்ந்திருந்தன.

கடந்த வருடமே இவர் கனடாவிற்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

மே மாதம் 1ம் திகதி விருந்தொன்றில் கலந்து கொண்டு விட்டு அருகிலுள்ள கடைக்கு சிகரெட் வாங்கச் சென்ற போதே கொலை நடந்திருக்கிறது. அவரோடு இன்னொரு வாலிபரும் கூடச் சென்றிருக்கிறார். திடீரென்று வாகனம் ஒன்றில் தோன்றி வழி மறித்த குழுவினர் அவர்கள் இருவரையும் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதில் கொல்லப்பட்டவரான வாலிபரோடு வந்த இன்னொரு இளைஞர் தப்பி ஓடி விட்டார். துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் தப்பி ஓடிய வாலிபரையே தேடி வந்ததாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகச் சத்தம் கேட்டு அயலவர்கள் எட்டிப் பார்த்த போது தாங்கள் சந்தோசமாக இருப்பதாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் கூறினார்களாம். பெரும் சத்தங்களோடு இலங்கைத் தமிழர்கள் விருந்துகள் நடத்துவதால் அயலவர்கள் சந்தேகம் கொள்ளவில்லை.

இவ்வாறான சம்பவங்கள் கனடாவிலுள்ள இலங்கைத் தமிழர்களை இரண்டு விதமாக அச்சமூட்டி இருக்கின்றன. ஒன்று, கனடா அரசு சகல இலங்கைத் தமிழர்கள் மீதும் இறுக்கத்தை ஏற்படுத்துமோ என்பது.

இரண்டாவது காரணம் ஆயுதங்களின் கண்மூடித்தனமான ஆதிக்கத்துக்குப் பயந்து தப்பி ஓடித் தஞ்சம் தேடிய இடத்திலும் நிம்மதியை இழக்கவேண்டிய சூல்நிலை ஏற்படுமோ என்பது.

கனடாவிலுள்ள பத்திரிகைகள் இலங்கைத் தமிழ்க் குழுக்களுக்கு இடையே நடக்கும் மோதல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கி இருக்கின்றன. ரொரன்ரோ நகரில் இருந்து வெளிவரும் சண்

—நமது கனடா நிருபர்—

பத்திரிகை கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதிலுள்ள முக்கிய பகுதிகள் பின்வருமாறு,

கடந்த வருடம் மே மாதம் தமிழ் அறிவிப்பாளர் சிவசோதி கந்தையாவின் இல்லத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் பத்திரிகையாளர் டேவிட் ஜெயராஜா தாக்கப்பட்டார்.

சமீபத்தில் நடந்த நான்கு தாக்குதல்கள் பற்றிப் பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்படவில்லை. 29 வயதான வர்த்தகர் ஒருவர் துப்பாக்கி முனையில் தாக்கப்பட்டு மிரட்டப்பட்டார்.

ரொரான்ரோவில் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த 75 பேர் தங்கி இருக்கின்றனர். அவர்களில் பலர் புலிகளின் ஆதரவாளர்கள்.

பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக ஒன்பது மில்லிமீற்றர் பிஸ்ரல்கள், ரைபிள்கள், பேஸ்போல் மட்டைகள், இரும்புக் கம்பிகள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று ரொரான்ரோ சண் எழுதியிருக்கிறது.

இதற்கிடையே ரொரான்ரோ நகரப் பொலிசார் கனடாவாழ் தமிழ் மக்கள் மத்தியில் நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். சமீபத்தில் ரொரான்ரோ நகரில் உள்ள இலங்கைத் தமிழர்களை அழைத்து மாநாடு ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும் என்பதை நமது தமிழர்கள் சிலர் தவறாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தமிழர்களைப் பற்றி உலகமே தவறான அபிப்பிராயம் கொள்ளக் கூடிய நிலமை ஏற்பட்டு வருகிறது.



### புலிகள் நடத்தும் பொதுக்கல்வித் தேர்வு

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரால் மாணவர்களுக்கான பரீட்சைகள் அண்மைக் காலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அதற்குப் போட்டிப் பரீட்சை என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. இப்போது தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு என்று புலிகள் அமைப்பினர் அதற்குப் பெயரிட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் புலிகள் அமைப்பு நடத்திய பொதுக்கல்வித் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பிரபாகரனால் பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை தமது இயக்கம் நடத்தும் பொதுக்கல்வித் தேர்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 28ம் திகதி யாழ்பாணத்தில் ஆரம்பமாகும் என்று புலிகள் அமைப்பு தெரிவித்திருக்கிறது.

பரீட்சையில் புலிகள் அமைப்புப் பற்றிய கேள்விகளுக்கு அதிக இடம் வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.

### அமைச்சர் அஸ்வர் நிதி உதவி

காலிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. புத்திக குருகுலரட்ன அவர்களின் வேண்டுகோளின் பேரில், முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்கள் பலப்பிட்டிய முஸ்லிம் இளைஞர் மன்றத்தினருக்கு ரூபா இருபத்தையாயிரம் வழங்கியுள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்பட்டுள்ள அப்பணம் முஸ்லிம் சமய, கலாசார பணிகளுக்குப் பயன்படுத்தப்படவிருக்கிறது.

(ஏ.சி.எம்.சாபி)

### மாணவர் அவதி

கா/ தல்கஸ்வெல தமிழ் வித்தியாலயத்தில் நீண்ட காலமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது. சுமார் 120 பிள்ளைகள் இங்கு ஐந்தாம் ஆண்டுவரை கல்வி கற்று வருகின்றனர். அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் கடமை யாற்றுகின்றனர். அதிலும் ஒருவர் சிங்கள மொழி மூல ஆசிரியை ஆவார்.

கல்வித் தாகம் கொண்ட இப்பகுதி மக்களின் நலன் கருதி இப்பகுதியில் தோட்டப் பாடசாலை நியமனங்களையோ வழங்கி உதவுமாறு அப்பகுதி மக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**தகவல்: ஏ. சி. எம். ஸாபி**

## புகார் பெட்டி

### வானொலி வருவதில்லை

திருக்கோணமலையில் இலங்கை வானொலி தமிழ் சேவை நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்க முடியாமல் இருக்கிறது. சிங்கள நிகழ்ச்சிகள் தெளிவாக இருக்கின்றன. அதனால் இங்குள்ள தமிழ் பேசும் மக்கள் பெரிதும் அதிருப்தியுற்றிருக்கின்றனர். இதனை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா?

தகவல்: எஸ். தனேந்திரன்.

### பலப்பிட்டி முஸ்லிம்கள் படும் பாடு

பலப்பிட்டி முஸ்லிம்களுக்குரிய காணிகள் அரசாங்கத் தேவைகளுக்குச் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. பலப்பிட்டி முஸ்லிம்களின் வீடில்லாப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த அரசியல் வாதியும் முன்வரவில்லை.

அண்மையில் இங்குள்ள கொடைவள்ளல் ஒருவர் ஒரு காணியை வழங்கி வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்

படி கூறியும் அரசியல் வாதிகள் உதவவில்லை. அதனால் கவலையடைந்த அந்தக் கொடை வள்ளல் தனது குடும்பத்தவர்களுக்கே அந்தக் காணியைப் பகிர்ந்து கொடுத்துள்ளார்.

**தகவல்: எம். எஸ். எம். அரூஸ்**

### சேமிப்புப் பணத்தைக் கேட்கிறார்கள் புத்தளம் அகதிகள்

யாழ் மாவட்டத்திலிருந்து குடிபெயர்ந்து புத்தளம் பகுதியில் உள்ள முஸ்லிம் அகதிகள் மிகவும் கஷ்ரமான வாழ்க்கை நடத்துகிறார்கள். ஜனசவிய உரித்துடைய நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு பணவசதியின்றித் தவிக்கின்றனர்.

நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஜனசவிய உரிமையுடையோர் இதுவரை சேமித்த பணத்தைத் திருப்பி எடுக்கலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆனால் அகதிகளின் ஜனசவிய சேமிப்புப் பணத்தைத் திருப்பி எடுப்பதற்கு புத்தளம் அகதிகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. சம்மந்தப்பட்டவர்களின் கண்கள் திறக்காதா?, நீதி கிடைக்காதா? என்று அகதிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

தகவல்: எம்.எஸ்.எம். அரூஸ்

### திஹாரிய வட்டாரத்தில் மின்சாரத் தடை நீங்குமா?

கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல்ல பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட திஹாரிய முஸ்லிம் வட்டாரத்தில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவது வழக்கமாகி விட்டது.

இரவு நேரங்களில் மின்சாரம் தடைப்பட்டால் பெரும்பாலும் மறுநாள் காலையில் தான் பழுதுபார்க்கப்படுகிறது.

எனவே திஹாரிய வட்டாரத்தில் நீண்டகாலமாக நிலவும் மின் விநியோகச் சீர்கேடுகளை உடன் நிவர்த்தி செய்து சீரான மின்சாரம் வழங்குவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை ஆகும்.

தகவல்: எம்.எச்.எம். காரித்.

புகார் பெட்டியில் இடம்பெறும் அம்சங்கள் குறித்து மாற்றுக் கருத்துக்கள் இருந்தால் அவற்றை நீங்கள் அனுப்பி வைக்கலாம். புகார்ப் பெட்டியில் இடம்பெறும் விடயங்கள் யாரையும் புண்படுத்தும் நோக்கத்தி லானவை அல்ல. தவறுகளைச் சுட்டிக்காட்டிப் பண்படுத்தும் நோக்கத்திலானவை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# போராட்டத்திற்கு உத்வேகம் வேண்டும்! புலிகளின் தலைவர் அறைகூவல்!!

நீண்ட கால யுத்தம் வடக்கு கிழக்கிலுள்ள மக்களை சலிப்படையச் செய்திருக்கிறது. போரின் விளைவுகள் மக்களைக் களைப்படைய வைத்திருக்கின்றன. இவ்விடயங்கள் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

யுத்தம் குறித்து சலிப்பான மனோபாவம் மக்களிடையே காணப்படுவது, புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு விரோதமான நிலைமையினையே ஏற்படுத்தும்.

ஆரம்ப காலத்தில் புலிகளின் பிரச்சாரத்தில் காணப்பட்ட உணர்ச்சிகரமான வேகம் தற்போது தணிந்திருக்கிறது. புலிகளின் பிரச்சாரத்துறையில் இருப்பவர்களும், நீண்டகாலமாக ஒரே வகையான பிரச்சாரத்தை மேற்கொண்டதில் சலிப்படைந்திருக்கிறார்கள்.

யுத்தத்தில் ஆயுதங்களுக்குள்ள முக்கியத்துவம், பிரச்சாரத்திற்கும் இருக்கிறது. அன்று முதல், இன்றுவரை புலிகள் உள்நாட்டிலும் தீவிரமான பிரச்சாரங்களை மேற்கொள்வதில் கூடிய கவனம் செலுத்தி வருகிறார்கள்.

எனவே, தமது பிரச்சாரத்தில் ஏற்பட்டுள்ள தொய்வை அகற்றுவதற்கும், மக்களின் மனோபாவத்தில் உணர்ச்சிகரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பிரச்சாரங்களைச் செய்வதற்கு பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார்.

வடக்கே இருக்கக் கூடிய இலக்கியவாதிகளை ஒன்று படுத்துவதிலும், அவர்கள் மூலமாக உத்வேகம் ஊட்டக் கூடிய கதைகள், கவிதைகள், நாடகங்கள் போன்றவற்றைத் தயாரிப்பதிலும் தீவிர அக்கறை காட்டப்படுகிறது.

உடனடியாக வடக்கே ஒரு பாரிய தாக்குதலை இராணு வத்தினர் மேற்கொள்வார்கள் என்று கருத இடமில்லை. மீண்டும் ஒருமுகப்படுத்தப்பட்ட தாக்குதல் ஒன்றுக்குப் பாது காப்புப்படைகள் தயாராவ தற்கிடையில், தமது அணிகளைச் சீர்படுத்தி முடிக்க பிரபாகரன் திட்டமிட்டுள்ளார்

## புலிகள் வகுத்து வரும் புதிய திட்டங்கள்!

என்று அறியப்படுகிறது. மறுபுறம், மனித உரிமை அமைப்புக்களைத் திருப்திப் படுத்தி அதன் மூலமாகத் தமக்குச் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தவும் புலிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

சிங்கள மீனவர்கள் சிலரைப் பிடித்து வைத்திருந்து பின்னர் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலமாக அவர்களை விடுவித்தமை, தமது பிடியில் உள்ள சிங்களப் பொலிசாரை விடுவிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்தமை, வெளியுலகில் புலிகளுக்கு நன்மதிப்பைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய மதகுருமார்களைச் சந்தித்தமை, போன்ற நடவடிக்கைகள் மனித உரிமை அமைப்புக்கள் தம்மீது கொண்டுள்ள

## சோர்வை அகற்றத் தீவிர முயற்சி

கோபத்தைத் தணிக்கும் என்று புலிகள் கருதுகிறார்கள்.

இலங்கை அரசின் மீதும், புலிகள் மீதும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது கடந்த வருடத்திற்கான அறிக்கையில் கடும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி இருந்தமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

சர்வதேச மனித உரிமைச் சபை புலிகள் மீது சாட்டிய குற்றச்சாட்டுகளில் இரு விடயங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஒன்று, புலிகள் சாதாரண முஸ்லீம்கள் மீது கட்டவிழ்த்து விட்ட படுகொலை நடவடிக்கைகள்.

இன்னொன்று, வடக்கே புலிகளின் சிறைகளில் இருக்கும் தமிழர்களைப் பற்றியது.

முஸ்லிம்களுக்கு எதிரான புலிகளின் நடவடிக்கைகள் வெளியுலகில் புலிகளின் செல்வாக்கை பாரிய அளவில் பாதித்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

குறிப்பாக மனித உரிமை மீறல்கள் குறித்து அரசு மீது புலிகள் குற்றம் சாட்டும் போது, கேலிக்குரிய ஒன்றாகக் கருதப் படுவதற்கு முஸ்லிம்கள் மீதான புலிகளின் தொடர்தாக்குதல்கள் ஒரு முக்கிய காரணமாகும்.

தற்போது முஸ்லிம்களுக்கு எதிரான வெளிப்படையான தாக்குதல்களை அல்லது ஆயுத ரீதியான தாக்குதல்களைப் புலிகள் நிறுத்தியிருப்பதாகவே தெரிகிறது.

அவ்வாறு நிறுத்தப்பட்ட தானது, மனித உரிமை அமைப்புக்களின் சீற்றத்தைத் தணிக்கும் மிக முக்கியமான முயற்சி என்று சொல்லலாம்.

புலிகளின் மீது மனித உரிமை அமைப்புக்கள் கொண்டுள்ள வெறுப்பான கண்ணோட்டத்திற்கு சமீபத்திய உதாரணமாக அமைந்தது கிட்டுவின் மரணம்.

இந்தியா அத்துமீறி நடந்துகொண்டது, சர்வதேச கடல் சட்டங்களை மீறியது என்று புலிகள் குற்றஞ்சாட்டினார்கள். கிட்டு ஒரு சமாதானத் திட்டத்தோடு வந்தாரென்று சர்வதேச அனுதாபத்தைத் திரட்டும் வகையில் புத்திசாலித் தனமாக அறிவித்தார்கள். கிட்டுவும் அவரோடு ஒன்பது புலிகளும் மாண்டபோதும் கூட மனித உரிமை அமைப்புக்கள் கண்டு கொள்ளவில்லை.


ஆகவே, வடக்கே புலிகளுக்கு எதிரான பாரிய நடவடிக்கை ஒன்றை இராணுவம் ஆரம்பித்தால் அழிவுகளைக் காரணம் காட்டித் தாக்குதலை இடைநிறுத்தும் நிர்ப்பந்தத்தை அரசு மீது ஏற்படுத்தக் கூடிய அமைப்புக்களும், மற்றும் இலங்கை அரசிற்குக் கடன் வழங்கும் நாடுகள் புலிகள் மீது அனுதாபம் காட்டப் போவதில்லை என்பதே தற்போதைய நிலவரம் ஆகும்.

அதனால் மனித உரிமை அமைப்புக்களின் நன்மதிப்பினைப் பெறுகின்ற நடவடிக்கைகளும் புலிகளின் இன்றைய வேலைத் திட்டத்தில் முக்கிய இடம் பெறுகின்றன.

விமானப்படையினரின் குறி தவறிய குண்டு வீச்சுக்கள் புலிகளுக்கு உதவுகின்றன என்றே சொல்ல வேண்டும். இன்று வடக்கே உள்ள மக்களின் புலிகளுக்கு எதிரான அதிருப்தி, போருக்கு எதிரான வெறுப்பு, அரசாங்கத்தின் மீது ஏற்பட்டு வரும் நம்பிக்கைகள் அனைத்தையும் விமானப்படையினர் வீசும் குண்டுகள் சேதப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்ற கருத்தை மறுப்பதற்கில்லை.

சில பகுதிகளில் புலிகளின் முகாம்கள் குண்டு வீச்சுக்களால் அழிக்கப்பட்டன. கடற்புலிகளின் முக்கியமான முகாம்களும் அழிக்கப்பட்டன. ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இலக்குகள் தவறுகின்றன என்பதே

# எக்ஸ்ரே ரிப்போர்ட்




—நாரதர்—

## அதிரடி அய்யாத்துரை

உத்தியோகப் பற்றற்ற சீருடைப் பிரிவு கலைக்கப்பட்டதில் சீருடை உயர்வட்டாரங்களிலும் மகிழ்ச்சி நிலவுகிறதாம். இயங்கிக் கொண்டிருப்பவர்களை ஓய்வில் இருப்பவர்கள் எப்படி விசாரிக்க முடியும்? என்று புழுகிக் கொண்டிருந்தவர்களுக்கு இப்போது சரியான சந்தோசம். வருடம் தோறும் அந்தப் பிரிவுக்காக தொண்ணூறு லகரங்கள் செலவானதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி தீட்டியிருக்கிறது. அது சரி அத்தனை செலவில் இயங்கியும் கூட சாதித்தது மட்டும் பூச்சியம் தானாக்கும். அரசியல் பிரமுகர் ஒருவர் நமது காதோடு ஒரு விசயத்தைச் சொன்னார். அன்புக்கு அடிமையான முன்னவர் தவறான சிலரை அதிகமாக நம்பி விட்டாராம்.

எதிரணி வட்டாரங்கள் தலைநகர் வசப்பட்டதில் வலு குஷியாக இருக்கிறார்கள். பின்நெடுத்த பிள்ளையின் பிரமாதமான வெற்றியில் தாயார் மெய்மறந்து போனாராம். தலைநகர ஆங்கிலப் பத்திரிகையொன்று தாயும், மகளும் வெற்றிக் களிப்பில் அரவணைந்து கொண்டதைப் பிரசுரித்திருந்தது. தாயார் முதற்பெண் பிரதமர், மகளோ முதல் பெண் முதலமைச்சர், சந்தோசத்தில் நியாயம் உண்டு. பொதுத் தேர்தல் வருமானால் முதலமைச்சர் பதவியை நிசைன் பண்ணி களத்தில் குதிக்கும் எண்ணம் உண்டாம்.

சமீபத்திய தேர்தலில் மண்கவ்விய சிலர் கவ்வியது உண்மை தான் ஆனால் மீசையிலே மண்படவில்லை என்கிறார்களாம். எட்டுமோ என்று ஏணி வைத்து முயற்சி செய்த பிரமுகர் ஒருவர் சொன்ன காரணம் ரொம்பச் சுவையானது. தனக்கென்று போடப்பட்ட வாக்குகள் சொல்லாதவையாகிவிட்டனவாம். அவருக்குக் கிடைத்த வாக்குகள் நூறு. நூறு பேரைத் தவிர கொஞ்சம் விபரமான ஆதரவாளர்கள் வேறு யாரும் தனக்கு இல்லை என்கிறாரோ? அல்லது விபரமானவர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோ? ராமா, ஹரே ராமா.

கொழும்பின் தமிழ்ப் பத்திரிகை உலகில், செல்லமான படப்பிடிப்பாளர் ஒருவர் கமெராவை விட கத்தரிக்கோலையே அதிகம் பயன்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள். அதிலும் பெரிய கொடுமை தன்முன்னால் தரப்பட்ட பிரத்தியேக போஸ், பிரத்தியேகப் பேட்டி என்று கூறி டபாய்க்கிறாராம்.

கத்தரிக்கோல் உபயத்தில் தங்கள் பெயரைப் போட்டுக்கொள்ளும் சிலரை இந்த ஐயாத்துரைக்குத் தெரியும். நேரம் வரும் போது ஆதாரத்தோடு கோலம் தெரியும். இப்போது திருந்த ஒரு சந்தர்ப்பம் கொடுப்போமாக. வெளியுலகச் செய்திகளைத் திரட்டித் தருவதில் தவறில்லை. அவற்றைத் தமது சொந்த ஆக்கங்களாகச் சத்தியம் செய்வது தான் தப்பு. மகாதப்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

உண்மை ஆகும்.

பாதுகாப்புப்படையில் தற்போது உள்ள தலைமைத்துவம் அநியாயமான உயிரிழப்புகளைத் தவிர்ப்பதில் அக்கறை கொண்ட உயர் அதிகாரிகளைக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. எனினும் தவறான இலக்குகள் மீது குண்டுகளை வீசி விட்டு, சரியான இலக்குகள் மீதே அவை போடப்பட்டதாகத் தவறான தகவல்கள் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

எப்படியோ அநேகமான குண்டு வீச்சுச் சம்பவங்கள் புலிகளுக்குச் சாதகங்களையே ஏற்படுத்துகின்றன. புலிகள் வகுத்துள்ள மற்றொரு திட்டம் வெளிநாடுகளில் இருக்கக் கூடிய மிக முக்கியமான பிரமுகர்களை பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுத்துவது.

புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் அவ்வாறான முக்கிய பிரமுகர்களைத் திரட்டுவதில் ஈடுபட்டிருக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் சிலவற்றை இலங்கை விவகாரத்தில் தலையிட வைக்க புலிகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. அதனை அடுத்தே முக்கிய பிரமுகர்களைத் திரட்டும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அவர்கள் மூலமாக பேச்சு வார்த்தைக்கான முயற்சிகளை ஆரம்பிப்பது. அவ்வாறு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தீவிரமான தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பது அரசுக்கு இயலுமானதாக இருக்காது. ஆகவே அவகாசமும் கிடைக்கும்.

அந்தப் பேச்சு வார்த்தைக்கான முயற்சிகளில் ஈடுபடும் பிரமுகர்கள் மூலமாகப் புலிகள் தங்களை அரசியல் அபிலாசைகள் கொண்ட அமைப்பாக வெளியுலகில் இனங்காட்டிக் கொள்ள முடியும். ராஜீவ் கொலைக்குப் பின்னர் தம்மீது பதிந்துள்ள ஆழமான பயங்கரவாத முத்திரையை அகற்றுவது புலிகளுக்கு மிகவும் அவசியமானதாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தென் கிழக்காசிய அறிஞர்கள் சிலர் இலங்கையின் இனப் பிரச்சினை விடயத்தில் உதவ முன்வந்துள்ளமையும் அதனைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரச்சாரம் செய்துள்ளமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலக்கிய விழா ஒன்றிற்கு பிரபாகரன் வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார். தமிழர்களின் தேசிய சுயஉணர்வைக் கட்டி எழுப்புவது, போராட்டத்திற்கு ஊட்ட சக்தியை ஊட்டுவது போன்ற அம்சங்கள் அதிலே முக்கியத்துவப் படுத்தப்பட்டிருந்தன.

ஆக, புலிகள் களைப்பை அகற்றிக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு ஆயத்தமாகிறார்கள் என்றே கருத முடிகிறது. ●



கிட்டுகடலில் பலியாகி ஆறு மாதங்களாகி விட்டன. கிட்டுவின் மரணத்திற்கு புலிகள் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். இந்தியா பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

ராஜீவ் கொலையின் மூலம் இந்தியாவின் விரோதத்தை புலிகள் சம்பாதித்துக் கொண்டது மகா மடைத்தனம் என்பதே தமிழர்களின் கருத்து.

கிட்டுவின் மரணத்தை இந்தியாவின் மாபெரும் துரோகமாகக் காட்டுவதன் மூலம் புலிகள் தம்மை நியாயப் படுத்திக் கொள்ள முற்பட்டனர்.



## மலேசியா
## புதிய தலைமுறை தயாராகிறது





மலேசியாவின் பிரதமர் மகாதீர் முகமது புதிய ஐக்கிய மலேசிய தேசிய இயக்கத்தை ஆரம்பித்தார். அக்கட்சியில் இளம் தலைவர்கள் உற்சாகமான வேகத்தோடு முன்னணிக்கு வரத் தொடங்கி இருக்கின்றனர்.

மலேசியாவின் அரசியல் தரம் உயர்ந்தது என்று சொல்லப்பட முடியும். ஏனென்றால் அங்கு ஆசிரியர்களும், விவசாயிகளும் அரசியலில் பங்கு கொண்டார்கள். பந்தா கிடையாது. ஜால்ராக்கள் கிடையாது. அரசியல்வாதிகள் சாதாரண மக்களோடு மக்களாகப் பேரூந்துகளில் பயணம் செய்வார்கள்.

இப்போது கொஞ்சம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சற்று வசதியான வர்த்தகர்களும் அரசியலின் பக்கம் நாட்டம் காட்டத் தொடங்கி இருக்கின்றனர்.

அரசியலில் இளைஞர்களை ஈடுபடுத்திய பெருமை 67 வயதான மலேசியப் பிரதமருக்கே சேருகிறது. அவரது ஐக்கிய மலேசிய தேசிய அமைப்பு சீனர்கள் மற்றும் இந்திய வம்சாவழியினரின் கட்சிகளோடு சில மாநிலங்களில் ஒன்று சேர்ந்து செயற்படுகிறது. 1957ல் சுதந்திரம் கிடைத்தபோது இக்கட்சிகளின் கூட்டணி ஆட்சி ஏற்பட்டது.

எதிர்க்கட்சியாக விளங்கிய சீனர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சனநாயக நடவடிக்கைக் கட்சி 1969 பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து இனக்கலவரங்கள் வெடித்தன.

நாட்டின் செல்வவளம் சமமாகப் பங்கிடப்பட்டமையே என்பதை உணர்ந்த அரசு 1970ல் புதிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.

புதிய பொருளாதாரக் கொள்கை 20 ஆண்டுத் திட்டமாக அமுல் நடத்தப்பட்டமையினால் பூரண வெற்றி அளித்துள்ளதாக பிரதமர் மகாதீர் கூறுகிறார்.

புதிதாக அரசியலுக்கு வந்துள்ள இளையவர்களைப் பழையவர்கள் பலர் ஆதரிக்கத் தயக்கம் காட்டுகிறார்கள். ஐக்கிய மலேசிய தேசிய அமைப்பில் வேறு இனத்தவர்களை அதாவது மலாக்கா, போத்துக்கீய வம்சாவழியினரை இணைத்துக் கொண்டு அதனைப் பல இனக் கட்சியாக மாற்றி அமைப்பதைச் சிலர் எதிர்க்கின்றனர். அதனை மலேசிய இஸ்லாமிய அமைப்பாக மாற்றிக் கொள்ள அவர்கள் நாட்டம் கொண்டுள்ளனர்.

ஐ.ம.தே.அமைப்பில் இப்போது பதினெட்டு லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எதிர்வரும் நவம்பர் மாதம் கட்சித் தேர்தல்கள் நடைபெற இருப்பதால் இளைஞர்களும், வயதான ஆனால் ஆர்வம் குன்றாத கட்சி உறுப்பினர்களும் பெரும் பதவிகளுக்கு இலக்கு வைத்துள்ளனர். ●


## உலக ரவுண்டப்

## நாட்டியமே எனது மதம்

கோலாலம்பூரைச் சேர்ந்த மாவின் கூ பதினாறு வயது இளைஞன். கலைஞானம் மிக்கவன். பாலே நடனத்தில் அவன் பலே கில்லாடி.

மாவின் கூ வுக்கு பரத நாட்டியம் பயிலும் ஆசை ஏற்பட்டது. ஆசைக்கு அணை போடாமல் பரதநாட்டியத்தைக் கற்றுக் கொண்டார். கற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் தமிழகத் தலைநகரான சென்னைக்கு வந்து தனது திறமையைக் காட்டியுள்ளார்.

இந்திய நோட்டியக் கடலில் மென்மேலும் நீச்சலடித்து சாதனைகள் புரியும் ஆர்வம் கொண்ட மாவின் கூ "நாட்டியமே எனது மதம்" என்கிறார்.



## கவர்ச்சி உடை பதவிக்குத் தடை

சுவிற்சிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினரான 46 வயதுடைய கிறிஸ்டீன் பிரர்ணர் என்ற பெண் அந்த நாட்டின் அமைச்சராவதற்கு சகல தகுதிகளையும் பெற்றுள்ளார். அண் பிரதிநிதிகளை அதிகமாகக் கொண்ட சுவிஸ் பாராளுமன்றம் அதற்குத் தடையாக இருக்கிறது.

பிரர்ணர் சட்டவிரோதமான முறையில் கருச்சிதைவு செய்து கொண்டவர் என்றும், அவர் அணியும் ஆடைகள் கவர்ச்சியாக இருப்பதாகவும் குற்றஞ் சாட்டப்படுகிறது.

அவருக்கு அமைச்சரவையில் இடம்கொடுக்க மறுக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நூற்றுக்கணக்கான பெண்கள் வர்ண மைகளைப் பூசிக்கொண்டு பாராளுமன்றத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். பிரர்ணர் சொல்லுகிறார் இப்படி, "நாம் இன்னும் பல போராட்டங்களை நடத்த வேண்டும்."

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இரு பிரதமர்களின் புதல்வி ஒரு முதலமைச்சர்!

**அலசுகிறார் – இராஜதந்திரி**

உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரி என்ற பெருமையைப் பெற்றவர் திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா.

தமது கணவரான முன்னாள் பிரதமர் திரு.எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலையுண்டதையடுத்து திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலில் பிரவேசித்துப் பிரதமரானார்.

தற்போது இந்த இரு பிரதமர்களினதும் புதல்வியரான திருமதி. சந்திரிகா குமாரணதுங்க இலங்கையின் முதலாவது பெண் முதலமைச்சராக மேல் மாகாணசபையின் தலைமையை ஏற்றுள்ளார்.

திருமதி. சந்திரிகா குமாரணதுங்கவின் இந்த முதலமைச்சர் நியமனம், எதிர்க்கட்சியினர் மத்தியில் புதியதோர் திருப்பம் ஏற்படுவதையே சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றது.

பிரதான எதிர்க்கட்சி என்ற பெயரில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இயங்கி வருகின்றது. ஆயினும் அக்கட்சிக்குள் நிலவும் குத்து வெட்டுக்கள், மற்றும் குளறுபடிகள் என்பன கடந்த பல வருடங்களாக அக்கட்சியைப் படாத பாடுபடுத்தி விட்டிருந்தது.

எதிர்க்கட்சித் தலைவியான திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா தமது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது எதுவித ஆளுமையும் செலுத்த முடியாத நிலையில் பலவீன மடைந்திருந்தார்.

எனவே இத்தகைய தாறுமாறான நிலையிலேயே மாகாண சபைத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து போட்டியிட்ட மக்கள் கூட்டணி என்ற அமைப்பு கைப்பற்றியுள்ள மேல்மாகாண சபையின் முதலமைச்சராக திருமதி. சந்திரிகா குமாரணதுங்க தெரிவாகியுள்ளார்.

திருமதி. சந்திரிகா தனது பெற்றோரின் அரசியல் வாரிசாக வரும் எண்ணத்தை ஆரம்பத்தில் கொண்டிருக்கவில்லை.

ஆயினும், இவரது கணவரான மறைந்த பிரபல சிங்களத் திரைப்பட நடிகர் திரு.விஜய குமாரணதுங்க அரசியலில் குதித்து தம்மை ஒரு பிரபலம் மிக்க அரசியல் வாதியாக்குவதில் முழுமையாக ஈடுபட்டிருந்தார்.

தெற்கில் மாத்திரம் தமது அரசியல் நடவடிக்கைகளில் கவனஞ் செலுத்தாது, வடக்கே குறிப்பாக தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் மத்தியிலும் தமது செல்வாக்கைப் பிரயோகிப்பதில் திரு. விஜயகுமாரணதுங்க ஆர்வங்காட்டினார்.

திரு. விஜய குமாரணதுங்க அரசியலில் ஈடுபடத் தொடங்கியிருந்த காலங்களில் தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் தென்னிந்தியாவிலிருந்தே தமது உயர்மட்ட

## மாட்சிமை பெறும் மலையக மக்கள்!

நடவடிக்கைகளை மேற் கொண்டு வந்தன.

இந்நிலையில் தமிழகத்துக்கு விஜயஞ் செய்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும், புளொட் தலைவர் உமா மகேஸ்வரன் ஆகியோரையும் திரு. விஜயகுமாரணதுங்க சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்புக்களின் போது திரு. விஜயகுமாரணதுங்கவுடன், அவரது துணைவியாரான திருமதி. சந்திரிகா குமாரணதுங்கவும் உடனிருந்தார்.

இதுதவிர, வடக்கே யாழ் குடாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அப்போதைய யாழ் மாவட்டத் தளபதியாகவிருந்த கிட்டு என்றழைக்கப்பட்ட திரு. சதாசிவம் கிருஷ்ணகுமாருடனும் திரு. விஜயகுமாரணதுங்க நேரடிப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

பல தடவைகள் யாழ்ப்பாணம் விஜயம் செய்து கிட்டுவைச் சந்தித்துப் பேசியதுடன், போர்க்கைதிகள் சிலரையும் புலிகளிடமிருந்து விடுவிப்பதில் திரு. விஜயகுமாரணதுங்க வெற்றி கண்டிருந்தார்.

எனவே தமிழ்த்தீவிரவாதக் குழுக்களுடன் நன்கு பரிச்சயமாகியிருந்தவரே திரு. விஜய குமாரணதுங்க. தெற்கிலும் சினிமாப் பிரபலத்துடன் அரசியல் ரீதியாகவும் பலமடைய ஆரம்பித்த வேளையிலேயே வஞ்சகக் கும்பலொன்று அவரைத் தொலைத்துக் கட்டியிருந்தது.

திரு. விஜயகுமாரணதுங்கவின் திடீர் மறைவே அவரது துணைவியார் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவின் அரசியல் பிரவேசத்துக்கும் வழிவகுத்திருந்தது.

தமது கணவர் மறைந்த சுமார் ஐந்து வருடங்களின் பின்னர் முதலமைச்சராக தற்போது திருமதி. சந்திரிகா குமாரணதுங்க ஆட்சிபீடத்தில் காலடி எடுத்து வைத்துள்ளார்.

இலங்கையில் தமிழர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையிலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தம் மூலம் மாகாணசபை நிர்வாக அமைப்பு தோற்றம் பெற்றிருந்தது.

இந்நிலையில் மேல் மாகாண சபை நிர்வாகம் மிகவும் முக்கியமானதொன்று. ஏனெனில் தலைநகரையும், இலங்கையின் ஏனைய முக்கிய நிர்வாக ஸ்தாபனங்கள் மற்றும் கைத்தொழில், வர்த்தகப் பேட்டைகளையும் இம்மாகாணம் தன்னகத்தே கொண்டுள்ளது.

எனவே மாகாணசபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கத்தை முழுமையாக அமுல்படுத்தும் விதத்தில் திருமதி. சந்திரிகாகுமாரணதுங்க தலைமையிலான மாகாண சபைநிர்வாகம் நிச்சயம் முழுமூச்சாகவே செயல்படும்.

ஏனெனில் பாராளுமன்றத்திலும், தேசிய அரசியலிலும் எதிரணியிலுள்ள அரசியல் கட்சிகளே மேல்மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளன. எனவே மேல் மாகாண சபையின் முற்று முழுதான நிர்வாக நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மாகாண சபை நிர்வாகத்தை மேலும் உயிர்துடிப்பானதாக்கி விடும் என எதிர்பாக்கலாம்.

கூடவே நாடு முழுவதும் கூடுதலானளவு அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படவும் புதிய மேல்மாகாண சபை துணை போகலாம் எனக் கருதிக் கொள்ள முடியும்.

மலையக மக்கள் தமக்கெதிரான அடக்குமுறைகளை உடைத்தெறிந்து, இந்த நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் கம்பீரமாகப் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளதையே, மத்திய மாகாணசபைத்தேர்தல் முடிவுகள் வெளிக் காட்டுகின்றன.

அமைச்சரான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமானின் அரசியல் சாணக்கியத்தினால் வழிநடத்தப்பட்டு வரும் மலையகத் தமிழர்கள் இலங்கையில் தற்போது சகலதுறைகளிலும் பெருமளவில் வேட்பாளர்களாகவும் அவர்கள் அரசியல் களம் புகுந்துள்ளதையே நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்கள் புலப்படுத்துகின்றன.

அமைச்சர் தொண்டமானின் இ.தொ.கா.வும், ஐ.தே.கவும் கூட்டாகப் போட்டியிட்ட இடங்களிலெல்லாம் அமோக வெற்றி கிடைத்துள்ளது. அத்துடன் நுவரேலியா மாவட்டத்தில் மலையக தமிழ் வேட்பாளர்களே கணிசமானளவில் தெரிவாகியுள்ளனர்.

அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கவென இலங்கை இன்று பல விரிவான பொருளாதாரத் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. ஆனால் மலையக மக்கள் தமது வியர்வையையும், இரத்தத்தையும் சிந்திக் கோடிக்கணக்கான ரூபாய்களை இலங்கை வருமானமாகப் பெற வழியமைத்திருந்தார்கள்.

மாபெரும் மனித வளமாக விளங்கிய மலையகமக்கள் குறுகிய கண்ணோட்டமுள்ள அரசியல் நடவடிக்கைகள் காரணமாக பன்நெடுங்காலம் கூனிக்குறுகியே வாழ்ந்து வந்தனர்.

ஆனால் அவர்கள் தற்போது சம உரிமைகளைப் பெற்றவர்களாக வாழ ஆரம்பித்துள்ளார்கள்.

இருண்ட மலைக்காடுகளையும், கரடுமுரடான குன்று

## முஸ்லீம் காங்கிரஸுக்கு விழுந்த சாட்டை!

களையும் பசுமையான தேயிலை விளைநிலங்களாக மாற்றியமைத்தவர்களே இந்த மலையக மக்கள்.

பலதசாப்தங்களாக வெறுமனே கூலியாட்கள் என்ற தரத்திலேயே மலையகமக்கள் வாழ்ந்து வந்தனர். தற்போது வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுள்ளதையடுத்து வாக்காளர்களாக மட்டுமல்லாமல், தலை நிமிர்ந்து வாழ ஆரம்பித்துள்ளனர்.

எனவே மலையகப் பாட்டாளி மக்களின் எழுச்சி, "பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்" என்ற பாரதிபாடல் வரிகள் நிதர்சனமாகிவருவதையே உணர்த்துவதாகக் காணப்படுகின்றது.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் குறுகிய இனவாத அரசியலுக்கு பலத்த சாட்டையடி கிடைத்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் இந்த நாட்டின் முஸ்லிம்களையெல்லாம் தம் பக்கம் கவரலாம் என்று ஜனாப். ஏ.எச்.எம்.அஷ்ரப் எண்ணியிருந்தார்.

ஆனால் அவரது இந்த எதிர்பார்ப்பு முற்றிலும் தவறானது என்பதனை முஸ்லிம் மக்கள் நிரூபித்துவிட்டுள்ளார்கள்.

இந்த நாட்டின் தேசிய அரசியலுடன் பெரிதும் பின்னிப் பிணைந்தவர்களாக முஸ்லிம்கள் காணப்படுகின்றனர்.

எனவே இப் பிணைப்பிலிருந்தும் முஸ்லிம்களைப் பிரித்தெடுத்து விட முடியாது என்பதனையே தென்னிலங்கைத் தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன.

வடக்கு- கிழக்கு விவகாரம், இந்த நாட்டில் சிறுபான்மை இனங்கள் கூடுதல் உரிமைகளையும் மற்றும் நிர்வாக அதிகாரங்களையும் பெற்றுத் தமது தனித்துவத்தைப் பேணி வாழ வெண்டுமென்பதனையே வலியுறுத்துவதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு விவகாரமானது, முஸ்லிம்களையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது. ஆனால் அண்மைக் காலங்களில் வடக்கு -கிழக்கில் முஸ்லிம்களுக்கு நேர்ந்த பாரதூரம் மிக்க கசப்பான அனுபவங்களை மையமாக வைத்து தமது அரசியல் சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்புவதில் ஜனாப் அஷ்ரப் விழிப்பாக இருக்கின்றார்.

ஆனால் வடக்கு-கிழக்கில் அப்பிரேதச மக்களின் கோரிக்கைகள் திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்படும் பட்சத்திலேயே, அப்பிராந்தியத்தில் ஒரு பூரண அமைதி நிலை ஏற்பட முடியும். அத்துடன் இந்த அமைதியான சூழ்நிலையிலேயே அங்கு ஒரு தேர்தலை நடத்துவது கூட சாத்தியமாக முடியும்.



எனவே வடக்கு- கிழக்கில் வாழுகின்ற அனைத்து மக்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை என்றோ ஒரு நாள் நிச்சயம் தோன்றவே செய்யும்.

அப்போது ஒரு தேர்தல் வடக்கு- கிழக்கில் இடம்பெறும் பட்சத்தில், முஸ்லிம்கள் என்ற குறுகிய வட்டத்திலிருந்தும் வெளிவராதவரை ஜனாப் அஷ்ரப் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்திலும் ஓரங் கட்டப்படுவது நிச்சயம் எனக் கொள்ளலாம். ●



அமரர் விஜய குமாரணதுங்க இந்தியாவில் புலிகள் இயக்க முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது பிடிக்கப்பட்ட படம். இ-வ: திருமதி. சந்திரிகா, விஜயகுமாரணதுங்க, திலகர், பாலசிங்கம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# A சினி



## டெர்ரிபல் போட்டி

தெலுங்கில் முதலாம் இடத்திலுள்ள விஜயசாந்தியின் இடத்தைப் பிடிக்க ரோஜாவும், மீனாவும் கடும் போட்டியில் இறங்கியிருக்கிறார்கள். போட்டி என்றால் போட்டிதான் எக்கச்சக்கமான கவர்ச்சிகாட்டி ரசிகர்களைக் கவர முயற்சி செய்கிறார்கள். அப்படி இருந்தும் விஜயசாந்தி இருவேடங்களில் நடித்துள்ள பொலிஸ் லாக்கப் தெலுங்கில் சக்கைபோடு போடுகிறதாம். விஜயசாந்தியை இப்போதைக்கு அசைக்க முடியாது என்கிறார்கள்.

விஜயசாந்திக்குப் போட்டியாக இருக்கும் மீனாவுக்கும், ரோஜாவுக்கும் இடையிலும் போட்டி இருக்கிறது. மாண்புமிகு மேஸ்திரி என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு ஓடிக்கொண்டிருக்கும் முட்டா மேஸ்திரி என்ற தெலுங்குப்படத்தில் இருவரும் நடித்திருக்கிறார்கள். ரோஜா என்ன சொல்கிறார் தெரியுமோ? அதிலே மீனா நடித்திருந்தாலும் ரசிகர்கள் ரோஜா எங்கே ரோஜா எங்கே என்றுதான் தேடிக் கொண்டிருந்தார்களாம். கிழிந்தது போ.

## கதை விவாதத்தில்


கமல்

தற்போது ஓடிக்கொண்டிருக்கும் கலைஞனை அடுத்துத் தனது சொந்தப் பட நிறுவனத்தின் தயாரிப்பு வேலைகளில் கமல் இறங்கி இருக்கிறார். அதற்கிடையே பதினாறு வயதினிலே படத்தைத் தயாரித்த எஸ்.ஏ. ராஜ்கண்ணுவின் படத்தில் சந்தானபாரதியின் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார். தனது படங்களின் கதை மற்றும் இயக்க விடயங்களில் தீவிர கவனம் செலுத்தும் கமல் சந்தானபாரதியோடு இப்போது கதை விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார். கதை ரெடியானதும் பெயர் சூட்டப்படும்.



● சத்யராஜ் கதாநாயகனாக நடிக்க, மணிவண்ணன் எழுதி இயக்கும் ஒரு படத்திற்கு "அமைதிப்படை" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. கே.ஆர். தயாரித்து, ராஜகபூர் இயக்கும் ஒரு படத்திற்கு "பறக்கும் படை" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.



## சொந்த உடை நடிகை

தமது பாத்திரங்களுக்கு ஏற்ப சொந்தமாக உடைகளை தயாரித்து படங்களில் பயன்படுத்தும் நடிகைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். முன்னர் நதியா நவீன டிசைன்களில் உடைகளை தயாரித்து அணிந்து நடித்தார். இப்போது ரோஜா. இவர் நடிக்கும் படங்களில் உடைகளை தானே டிசைன் பண்ணி அணிந்து கொள்கிறாராம்.

இப்போது சொந்தக் குரலில் பாடும் சீசன். கமல், பின்னர் ரஜினி. இப்போது சரத்குமார் பாட முயற்சி செய்கிறார் என்று தகவல். கோகுலம் படத்தில் பானுப்பிரியா பாடிவிட்டார். சுகன்யா ரசிகர்களை பயமுறுத்த ஆயத்தமாகிறார். பிரபு தனது நூறாவது படமான ராஜகுமாரனில் பாடலாம் என்று ஆசைப்படுகிறாராம்.

இதற்கிடையே ஒரு முக்கிய நியூஸ். செந்திலை பற்றிப் பாடுவதற்கு வசதியாக கடல் பன்றியே, காட்டெருமையே என்ற இலக்கியத் தரமான பாடல் எழுதப்பட்டுள்ளதாம். பாடுகிறவர் யாராக இருக்கும்? நீங்கள் நினைத்தது சரிதான். அது கவுண்டமணியே தான்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




# விரிட்

## உழைப்பாளியில் நடிக்க சிவாஜி மறுப்பு

ரஜினி நடிக்கும் உழைப்பாளி படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு முக்கியமான பாத்திரமொன்று வழங்கப்பட இருந்தது. ஆனால் சிவாஜி நடிக்க மறுத்து விட்டாராம்.

ரஜினி ரசிகர்களுக்கு ஒரு செய்தி: ரஜினி நடிக்கும் ரகசிய போலிஸ் 009ல் எத்தனை கதாநாயகிகள் தெரியுமா? நான்கு கதாநாயகிகள். இருவர் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகிறார்கள். இன்னொருவர் பம்பாயில் இருந்தாம். நான்காமவர் தமிழ் நடிகை. தெரிவு நடக்கிறது.



'சின்ன சின்ன ஆசை' என்ற பாடலின் சரணங்களை மாற்றி அந்தப் பாடலை அப்படியே தனது 'கோகுலம்' படத்தில் சேர்த்திருக்கிறார் இயக்குநர் விக்ரமன். இதற்காக, பாலசந்தரிடம் நேரில் சென்று அனுமதி பெற்று வந்தாராம். பாடல் இப்படி மாறியிருக்கிறது—

"பால் கலந்து காபி
குடித்துவிட ஆசை
விழிசலில்லா தாவணி
அணிந்து செல்ல ஆசை"



## பறந்த கிளி

சிங்கப்பூர் தொழில் அதிபரோடு பறந்து சென்ற மாதுரி மறுபடியும் சென்னை கோடம்பாக்கத்திற்கு திரும்பிவிட்டார். யாரும் திரும்பிப் பார்க்கவில்லை. கையில் உள்ளதைப் போட்டு துணிக்கடை ஆரம்பித்துள்ளாராம். இடைக்கிடையே படங்களில் வாய்ப்புக் கிடைத்தால் காட்டுவாராம் திறமையை.

## அபிலாசாவின் துணிச்சல்

ஆடை குறைப்பில் சாதனை படைத்தவர் அபிலாசா. நிர்வாணமாக அவர் அழகு காட்டிய படம் முதல் பாவம். இப்போது சொந்தப் படத் தயாரிப்பில் குதித்திருக்கிறார். செலவைக் குறைக்க ஆடைக்குறைப்பை தாராளமாக்கியுள்ளார்.

தனது சொந்தப் படமான (பாதுகாப்பு) கவர்ச்சியில் ஒரு கலக்கு கலக்கும் என்கிறார் அபிலாசா.

இன்று அதிகப்படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் நடிகைகள் யார்? அதாவது கதாநாயகியாக குஷ்பு/பானுப்ரியா என்று நீங்கள் நினைத்தால் அது தப்புக் கணிப்பு. அதிக படங்கள் கைவசமுள்ள நடிகை கஸ்தூரி! மொத்தம் பன்னிரண்டு படங்கள். அடுத்து வா சுகன்யா மற்றும் ரோகினி களா பத்துப்படங்கள். சிவரஞ்சனிக்கு ஒன்பது படங்கள். இவர்களுக்குப் பிறகுதான் குஷ்புவும் பானுவும்.

## காதோடு சொல்லுகிறோம்


* பிரியமான நடிகைக்கும் உயரமான நடிகர் ராஜாவுக்கும் இடையே ஒரு சத்தியமான ஒப்பந்தம். பிரியமான நடிகையின் தற்போது வெளியாகியுள்ள சொந்தப் படத்தில் நடிக்க ராஜ சம்பளம் வாங்கவில்லையாம். அதற்குப் பிரதியுபகாரமாக ராஜ் மனோஜ் இயக்கும் படத்தில் பிரியமான நடிகை ஊதியம் இன்றி நடிப்பாராம். ஒப்பந்தமோ? அன்புக்கட்டளையோ?
* தாடி நடிகரும் இயக்குநருமானவர் தயாரித்து வெளியான படம் படுபாதாளத்தில் சுருண்டு விட்டதாம். விளைவு? மன்னனான தாடி தன் வாரிசை வைத்து கோடிகளாகச் சம்பாதிக்கும் கனவு வாரிசு கலைந்து விட்டதாம். ஆடிப்போய் இருக்கிறாராம் தாடி.
* கவர்ச்சியான நடிகையை முன்னணி ஹீரோ ஒருவர் கம்பெனி கொடுக்குமாறு அழைத்தாராம். அவர் மறுத்து விட்டாராம். வெற்றிவேல் நாயகனுக்கு மட்டும் கம்பெனி கொடுப்பாராக்கும் என்று புழுங்குகிறாராம் அந்த ஹீரோ.
* சூப்பர் ஸ்டாராக மாறிக் காட்டுகிறேன் என்று சபதம் செய்த கிராம ராஜன் இப்போது வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறாராம். ஏதாவது கிரகக் கோளாறாக இருக்குமோ என்று அவரது துணைவியார் ஜோசியம் பார்த்துக் கொண்டு திரிகிறாராம்.
* மம்பெட்டியான்புகழ் தியாகமானவர் தன் புத்திரன் புகழ் பாடுவதில் படு பிசி. சமீபத்தில் வெளியான புத்திரனின் படங்கள் கருணாடகத்தில் கவலையோடு இருக்கிறாராம். தமிழகத்தில் உள்ள சிலரைக் கையில் போட்டுக் கொண்டு தமிழ் நாட்டின் அடுத்த சூப்பர் ஸ்டார் தனது புத்திரன் தான் என்று செய்திக் கசிய விடுகிறாராம்.
* 'பா' இயக்குநர் புது நடிகைகளை தெரிவு செய்யும் விதமே தனிதானாம். நட்சத்திர விடுதியில் அதற்கென்றே தனியான அறை ஒன்றை எப்போதும் தயாராக வைத்திருப்பாராம். அங்கு வைத்துத் தான் சொல்லிக் கொடுக்கிறாராம்.
* ரோஜாமான நடிகைக்கு மேக் அப்பிற்கு செலவிடும் தொகை கட்டுபடி ஆகவில்லை என்று தயாரிப்பாளர்கள் தலையில் அடித்துக் கொள்ளுகிறார்களாம். என்னதான் தாராளமாக நடித்தாலும் கட்டுபடியாக வேண்டாமோ என்கிறார்கள்.
* கப்டன் காந் மனது சரியில்லை என்றால் குடும்பத்தினர் சகிதம் கோவாவிற்கு சென்று விடுவாராம். அவரைப்பற்றி இன்னொரு செய்தி-கடந்த இரண்டாண்டுகளாக தினசரிப் பேப்பர்களை அக்கறையோடு படிக்கிறாராம். ஒரு வேளை அரசியலில் ஈடுபடும் எண்ணமாக இருக்குமோ?
* சூரியன் நாயகனுக்கும் இதயம் நாயகிக்கும் ஒரு இது என்கிறார்கள். அது தான் ஒரு பரஸ்பர அண்டர் ஸ்டாண்டிங்.



'பிரதாப்' படத்தில் குஷ்பு

# உண்மை நண்பன்

-எஸ். குழந்தைசாமி-



## மகிழ்ச்சியான செய்தி

பாப்பா முரசிற்கு நீங்களும் கதை-கவிதை-கட்டுரை போன்றவற்றை அனுப்பிவையுங்கள். அவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

சுந்தர் வசதியான வீட்டுப் பையன். மடிப்பு கலையாத சட்டைப் பையில் தின்பண்டங்களும் சில்லறைக் காசுகளும் மிடுக்காக இருக்கும்.

சுந்தரைப் பள்ளி மைதானத்தில் பார்த்ததும் பலாப் பழத்து ஈக்கள் போல் கந்தன், சேகர், அப்துல், பாபு எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொள்வர்.

மதிய உணவு இடை வேளையில் சந்தர் எடுத்து வரும் சின்ன சைக்கிளில் ஓசிப் பயணம் போட்டா போட்டியில் நடக்கும்.

ஒருநாள் மாலை பள்ளி விட்டு வீடு திரும்பும் சமயம் நெரிசலான இடத்தில் சைக்கிளில் இருந்து சுந்தர் தவறி விழுந்து விட்டான். விழுந்த வேகத்தில் அவனுடைய வலக்கை எலும்பு முறிந்து விட்டது.

சுமார் நான்கு நாள்களுக்குப் பிறகு சுந்தர் பள்ளிக்கூடம் வந்தான். கையில் கட்டு அப்படியே இருந்தது. அரையாண்டுத் தேர்வு நெருங்கும் நேரமும் அது.

ஆசிரியர் வகுப்பறையில் நுழைந்தார். சுந்தர் வந்திருப்பது அவருக்குத் தெரியும். பாடம் ஆரம்பிக்கும் முன்னர், "மாணவர்களே! உங்களுடைய நண்பன் சுந்தருக்கு எதிர்பாராமல் கையில் முறிவு ஏற்பட்டுவிட்டது. அதனால், அவனால் பாடங்களை எழுத முடியாது. உங்களில் யாராவது அவனுக்குப் பாடம் எழுதித்தர முடியுமா?" என்றார்.

வகுப்பில் குண்டூசி போட்டால் தெளிவாகக் கேட்கும் அமைதி நிலவியது.

"ஒருவரும் இல்லையா?" ஆசிரியர் மீண்டும் கேட்டார்.

மெல்லிய உருவம் ஒன்று தயக்கத்துடன் எழுந்தது.

கந்தனா? இல்லை. சேகரா? இல்லை. அப்துலா? இல்லவே இல்லை. பாபு? மூச்!

அது யார் தெரியுமா? அருள்மாணிக்கம்.

சுந்தரிடம் இருந்து தின்பண்டமோ, ஓசிச் சைக்கிள் பயணமோ கேட்காதவன். படிப்பில் சமர்த்து.


"வெரிகுட்!" ஆசிரியர் அவனைப் பாராட்டினார். "மதிய வேளையில் தினசரி கொஞ்சம் எழுதிக் கொடு" என்றார்.

அன்று நடத்த வேண்டிய திருக்குறள் பகுதியில் பாடம் ஆரம்பமானது.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'

குறளுக்கும் ஆசிரியர் சொன்ன விளக்கத்திற்கும் அருள்மாணிக்கம் அருமையான எடுத்துக்காட்டாக விளங்கினான்.

துன்பம் வந்த போது துணைக்கு வந்த அருள் மாணிக்கம் மட்டும் சுந்தர் மனதில் இப்போது நிலையாக நின்றான்.








# ஆளும் வளரணும்

கருத்து: எஸ்.குமார். படம்: விநா-



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## பிரத்தியேக சிறுகதை




நீல்கிரி மலையின் தொப்புளான குன்னூர்.

அந்த கிறிஸ்துவ கான்வெண்ட்டின் ஹாஸ்டல் கட்டிடத்தின் மேலுறையாகப் படுத்திருந்த பனிப்புகை கரையத் தொடங்கியது. கரைந்ததைக் காலை வெளிச்சம் அலம்பித் தள்ளிக் கொண்டிருந்தது.

ஹாலில் பொதுவாய் இருந்த அலாரம் உறுத்தாத ஒலியைச் சிந்தியதும் வரிசையாகத் தனித் தனிக் கட்டில்களில் உறங்கின பிள்ளைகள் விழித்துக் கொண்டார்கள். சிஸ்டர் சொல்லிக் கொடுத்தபடி 'இந்தத் தினத்தை ஒரு இனிய தினமாக அமைத்துக் கொடுப்பீர் கர்த்தரே' என்று மனதில் சொல்லிக் கொண்டு, இறங்கி போர்வைகளை ஒழுங்காக மடித்தார்கள்.

விஜய் தன் ஸ்வெட்டரைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, இறங்கியிருந்த ட்ரவுசரை ஏற்றி விட்டுக்கொண்டான். தனது கப்போட்டைத் திறந்து டவல், சோப்புப்பெட்டி, டூத்பிரஷ், எடுத்துக்கொண்டான்.

அவனுக்கு அன்று படு உற்சாகம்– மற்ற எல்லோரையும் விட அன்று ஞாயிற்றுக்கிழமை, பள்ளிக்கு விடுமுறை. முழு தினமும் விளையாட்டு, விளையாட்டு. இது எல்லோரின் உற்சாகம். ஆனால் விஜய்க்கு நேற்று வந்த கடிதம் ஒரு அதிகப்படியான உற்சாகம் தந்திருக்கிறது.

அம்மாவும், அப்பாவும் பார்ப்பதற்கு வருகிறார்கள். யப்பா, எத்தனை நாள் ஆயிற்று பார்த்து. ஸ்கூலில் சேர்த்துவிட்டு "சிஸ்டர் சொல்றபடி நடந்துக்கணும். சமர்த்தா நடக்கணும். குட்பாய்னு பேர் வாங்கணும்" என்று அப்பா ரயில் நீளத்திற்கு அறிவுரைகளாகச் சொல்ல.......

புறப்படுகிற நேரம் பார்த்து விஜய் தீர்மானமாக அழுது புரண்டு ஓடி வந்து அம்மாவின் புடவையைப் பிடித்துக் கொண்டு "நானும் வர்றேன்" என்று பிடிவாதமாச விம்மிய போது

அம்மா சிரித்து, "அடா, என் விஜய்க்கு அழக்கூட தெரியுமா? சேச்சே, என்ன இது. அழற பிள்ளை மோசமான பிள்ளை இல்லையா? அங்கப்பாரு, சிஸ்டர் உன்னைப்பார்த்து சிரிக்கிறாங்க. மத்த பாய்ஸ் எல்லாம் அய்யே... விஜய் அழுகிற பையன்னு சிரிக்கப் போறாங்க நீ குட்பாயா பேட் பாயா?"

"குட் பாய்" என்றான் விம்மல் நடுவில். "அப்ப சிரி. நாங்க அடிக்கடி வந்து உன்னைப் பார்ப்போம் விஜய். மூணே மாசத்தில கால் பரீட்சை லீவு வந்துடும். அப்ப வீட்டுக்கு வந்திடலாம். இது நல்ல ஸ்கூல். இங்கே டீச்சர் எல்லாம் அன்பா சொல்லிக் கொடுப்பாங்க. நீ நல்லா படிச்சி பெரிய டாக்டர் ஆகணுமா வேணாமா? அம்மாக்கு ஊசி குத்தணுமா இல்லையா? ஊசி குத்தரப்போ அப்பா மூஞ்சி எப்படி இருக்கும்?"

'கெக்கே' என்று விஜய் உடன் சிரித்தான்.

"வெரிகுட். இப்பதான் நீ குட்பாய். சிஸ்டருக்கு ஷேக் ஹேண்ட்ஸ் கொடு."

கொடுத்தான்.

"சிரிச்சிக்கிட்டே எங்களுக்கு டாட்டா சொல்லு. அடுத்த தடவை வாரப்போ டாக்டர் கிட் வாங்கிட்டு வருவோம். என்ன?"

கார் மறையும் வரை சிரித்துக் கொண்டேதான் டாட்டா காட்டினான். கார் மறைந்ததும் "உள்ளே போகலாம் வா" என்று சிஸ்டர் சொன்னதும் விஜய்க்கு மறுபடி அழுகை வந்துவிட்டது.

அப்போது போனவர்கள் இரண்டு மாசம் கழித்து இன்றைக்கு வரப்போகிறார்கள் என்று சிஸ்டர் கடிதம் படித்துச் சொன்னதுமே ஹுய்யா என்று குதித்தான் விஜய்.

எல்லா நண்பர்களிடமும் "இன்னிக்கு எங்க டாடியும் மம்மியும் வருவாங்களே... நிறைய பிஸ்கெட், சாக்லேட்ஸ் தருவாங்க. உங்களுக்கும் தர்றேன்" என்று வாக்குறுதி தந்தான். பேரண்ட்சிடம் காட்டுவதற்காக இவனுடைய ஸ்கூல் நோட்டுகள் எல்லாம் எடுத்து வைத்தான். கான்வெண்ட் தோட்டத்திற்குப் போய் ரோஜாப் பூக்கள் பறித்து வைத்து தன் கப்போர்ட் சுற்றிலும் அழகாக செருகி வைத்தான்.

விஜய் குளித்து, சலவை சட்டை, ட்ரவுசர் அணிந்து, ஸ்கூல் பாட்ச் குத்திக்கொண்டு, ஷு அணிந்து கொண்டு, டிஃபன் முடித்ததும் நேராய் ஹாஸ்டலுக்கு வெளியே இருக்கும் விசிட்டர்ஸ் பார்க் என்னும் சிறிய மலர்த் தோட்டத்திற்குள் வந்து பச்சை வர்ணமடித்த பெஞ்சுகளில் ஒன்றில் அமர்ந்து கொண்டான்.

அங்கங்கே நிறைய பச்சை பெஞ்சுகளும், மண் தொட்டியில் வளர்க்கப்பட்ட பூச்செடிகளும், ஓரவரிசைகளில் பனி நீர் சொட்டும் மரங்களும், வெயில் இல்லாத வெளிச்சமும், ஒரு ஒற்றைப் பறவையின் துணை அழைப்பும் சேர்ந்து விஜயின் சந்தோஷமான மனதிற்கு மேலும் இதம் சேர்த்திருந்தன.

அப்பா, அம்மாவிடம் என்னவெல்லாம் சொல்ல வேண்டும் என்று யோசித்தான். அவர்களை நினைத்துக் கொண்டு திடீரென ஒரு நடுராத்திரி எழுந்து உட்கார்ந்து " நான் ஊருக்குப் போகிறேன்" என்று திரும்ப திரும்ப விசும்பின போது மேரி சிஸ்டர் வந்து தன் அறைக்கு அழைத்துப்போய் சமாதானப் படுத்தினதைச் சொல்லலாமா?

"அய்யய்யோ அழுதியா? பேட்பாய்" என்று அம்மா சொல்வார்கள். அதைச் சொல்லக் கூடாது. தினம் காலையில் எழுந்ததும் பெட்டியிலிருந்து போட்டோவை எடுத்து அம்மாவுக்கு ஒரு முத்தம் அப்பாவுக்கு ஒரு முத்தம் கொடுப்பதைச் சொல்ல வேண்டும்.

தானாகவே சரியாய் வகிடு எடுத்து தலைசீவிக் கொள்வதை– தன் சட்டையைத் தானே துவைக்கக் கற்றுக்கொண்டதை வகுப்பில் ஷீலா மிஸ் ஒரு தடவை "வெரிகுட், விஜய் மாதிரி எல்லாரும் நல்லா படிக்கணும். பாருங்க ஒரு தப்பு கூட இல்லாம ரைம் சொல்றான்" என்று சொல்லி இவனை அணைத்து முத்தமிட்டதை–

ஒரு தரம் கணேஷ் இவனுக்கு வந்த அம்மா எழுதின லெட்டரைக் கிழித்து விட்டபோது வந்த தகராறில், அவன் பிடித்துத் தள்ளினதில் பெஞ்சில் இருந்த ஆணி கிழித்து தொடையில் ரத்தம் வந்து நாலு நாள் பிளாஸ்த் திரியோடு இருந்ததை–

ஹாஸ்டல் வார்டன் வைத்திருக்கும் குட்டி நாயின் பளிங்குக் கண்களைப் பற்றி– யுவராஜ் கொடுத்த பென்சில் பாக்ஸ் பற்றி–

ஒரு தரம் மழை பெய்து புஸ்தகம் எல்லாம் நனைந்து போய், ஃபானுக்கு அடியில் விரித்து எல்லாரும் வைத்துக் காய வைத்ததைப்பற்றி–

சமையல்காரனின் கிளி செத்துப்போனதை–

அப்புறம் கனவில் இவன் அம்மாவுக்கு ஊசி குத்தும் போது ஊசி உடைந்து போய் எல்லோரும் சிரித்ததைப்பற்றி–

வியாழக்கிழமைகளில் டிபனுக்கு வைக்கப்படுகிற அடை மட்டும் கடிக்கவே முடியாமல் கஷ்டமாய் இருப்பதை–

இன்னும் என்ன சொல்ல வேண்டும் என்று மனசுக்குள் தேடித்தேடி நினைவுக்குக் கொண்டு வந்தான் விஜய். இங்கிருந்து ஹாஸ்ட்டலின் காம்பௌண்ட் தெரியும் அதன் வாசல் தெரியும். அதன் வழியாகத்தான் கார் வரும்.

விஜய் வாசலைப் பார்த்துக் கொண்டு காத்திருந்தான். சங்கர் வந்தான் அவனிடம், விஜய், விளையாட வரலையா?

"சொன்னேன்ல, இப்போ அப்பாவும் அம்மாவும் வருவாங்க"

"ஜாலி உனக்கு, வெளில போவியா?"

"ஆமா, இன்னிக்கு பூரா வெளில அழைச்சிட்டுப் போய் கொண்டாந்து விடுவாங்களாம். சிஸ்டர் படிச்சு சொன்னாங்க".

"எங்கே போவே?"

"எங்காச்சும், புது ஸ்வெட்டர் வாங்கித் தருவாங்களே."

"அய், அப்புறம்?

"ஐஸ்கிரீம் வாங்கித் தருவாங்க. ரெண்டு கைலயும் ரெண்டு."

"எனக்குடா"?

"எப்படி எடுத்துட்டு வர்றது? எனக்குப் பிடிச்ச கேக் வாங்கிட்டு வருவாங்க அப்புறம் 'டாக்டர் கிட்' வாங்கிட்டு வருவாங்க"

"எனக்கு விளையாட தருவியா?"

"நீ கணேஷோட சேர்ந்துகிட்டு விடறியே......"

"இல்லை இனிமே விட மாட்டேன்."

"அப்ப தர்றேன். உன் அப்பா, அம்மா எப்ப வருவாங்க?"

"மண்டு....மண்டு...அவங்க சிங்கப்பூரில இருக்காங்க."

"அப்போ வரவே மாட்டாங்களா?

"வருவாங்க"

"எப்போ"

"தெரியல்லை. உங்க வீட்ல கார் இருக்கில்லே?"

"ஆமாம். பெரிய காரு உள்ளே தலையை ஆட்டிக்கிட்டு ஒரு நாய் பொம்மை இருக்கு.காரும் வரும் உனக்குக் காமிக்கிறேன்."

"கார்லதான் அவங்களோட வெளில போவியா?"

"ஆமாம்"

"என்னையும் அழைச்சிக்கிட்டு போறியா?"

"சிஸ்டர் திட்டுவாங்க"

"ஆமாம். வேணாம். நீ மட்டும் போ. கேக் எனக்குத் தரணும்."

"கண்டிப்பா தருவேன்."

"நான், பாலு கணேஷ் எல்லாம் விளையாடப் போறோம். அவங்க வந்ததும் என்னைக் கூப்புடறியா?"

"சரி"

சங்கர் ஓடிப் போனான். கையைக்கன்னத்துக்கு அடியில் முட்டுக்கொடுத்து வாசலை பார்த்துக் கொண்டிருந்த விஜயின் தோளில் ஒரு மெண்மையான கரம் படிய திரும்பிப் பார்த்து எழுந்து நின்றான். மேரி சிஸ்டர். "என்ன விஜய், எல்லோரும் விளையாடிக்கிட்டிருக்கிறாங்க. நீ ஏன் இங்கே உட்காந்திருக்க?"

"டாடியும் மம்மியும் வருவாங்க தானே?"

"ஆமாம், அதுக்காக ? லெட்டர்ல எத்தனை மணிக்கு வர்றோம்னு எழுதலையே நீ போய் விளையாடு. இல்லைன்னா ஹோம்வர்க் செய். அவங்க வந்ததும் வாட்ச்மேன் வந்து கூப்புடுவான்". தயக்கமாய் நின்று கொண்டிருந்தான் விஜய்.

"போப்பா. இங்கேயே உக்காந்திருந்தா வந்துடுவாங்களா? வர்றப்பதான் வருவாங்க."

மெதுவாக நடந்து சென்ற விஜய், திரும்பிப் பார்த்தான். மேரி சிஸ்டர் அவர்களின் குவாட்டர்ஸ் பக்கம் சென்று மறைந்ததும், அவசரமாக ஓடி வந்து அதே பெஞ்சில் அமர்ந்து கொண்டு வாசலைப் பார்த்தான்.

ஒரு கார் உள்ளே நுழைவதைக்கண்டு குதூகலித்தான். கிட்டே வந்ததும் அது வேறு கார். வேறு மனிதர்கள் என்பதை அறிந்து மறுபடி கேட்டைப் பார்த்தான்.

வந்து நின்ற காரிலிருந்து இறங்கின அந்தப் பெண்ணும், அவரும் விசிட்டர்ஸ் பார்க் உள்ளே வந்து ஒரு பெஞ்சில் அமர்ந்து கொள்ள... டிரைவர் ஹசஸ்டன் கட்டிடத்திற்குள் போனான்.

கொஞ்ச நேரத்தில் குமாரசாமி ஓடியே வந்துவிட்டான்.

அடடே, நம்ம குமாரசாமியின் அம்மா, அப்பாவா இவங்க என்று நினைத்துக் கொண்டான் விஜய். குமாரசாமி அவர்களை அடைந்ததும், அவன் அப்பா அவனைத் தூக்கி அப்படியே அந்தரத்தில் ஒரு சுற்றுச்சுற்றித் தன்னோடு அணைத்துக் கொண்டார். அம்மா அவனை அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டு இரண்டு கன்னத்திலும், நெற்றியிலும் மாறிமாறி முத்தமிட்டார்கள்.

அவனை நடுவில் உட்கார வைத்து இருவரும் நிறையப் பேசினார்கள்.

குமாரசாமி கையைக் காலை ஆட்டி என்னவோ சொன்னான். வார்த்தைக்கு வார்த்தை அவன் கன்னத்தில் முத்தம் கொடுத்து தன் உதட்டில் ஒட்டிக் கொண்டாள் அம்மா.

அப்பா தன் கைப்பையின் ஜிப்பை இழுத்து ஒரு ரெடிமேட் டிரெஸ் எடுத்து பட்டன் அவிழ்த்து அங்கேயே அந்த புதிய டிரெஸ்சை மாட்டிவிட்டார்.

குமாரசாமி அந்த புதிய உடையோடு விஜியிடம் ஓடி வந்தான்.

"நல்லா இருக்காடா?"

"ஜோரரா இருக்கு. உங்க அப்பாவா?"

"ஆமாம். சிஸ்டர்கிட்டே சொல்லிட்டு அவங்களோட போறேன்."

"நானும் போவேன். இப்ப வந்துடும் எங்க காரு. நீ எங்கப் போறே?"

"ஊட்டியில நிறைய தண்ணி இருக்குமாம். அதுல கப்பல்ல போகப் போகிறோம்."

"எங்கப்பாக்கிட்ட சொல்லிட்டு நானும் அங்கேயே வர்றேன்."

"இந்தா சாக்கிலேட்"

"வேணாம் எங்கப்பா நிறைய தருவாரு இப்போ."

குமாரசாமி கொஞ்ச நேரம் கழித்து தன் பெற்றோரோடு காரில் புறப்பட்டுச் சென்றான். விஜய் மனதில் ஏக்க தாகத்துடன் மத்தியானம் லன்ச்பெல் அடிக்கும் வரை சோர்வாய் காத்திருந்துவிட்டு மெஸ்சுக்குப் போகாமல் தன் ஹாலுக்கு வந்து கட்டிலில் படுத்துக்கொண்டான். சாப்பிடப் போகவில்லை.

லஞ்ச்சுக்குப் பிறகு பிள்ளைகள் எல்லாம் தோட்டத்தில் விளையாடினர். சிலர் ஹாலில் தரையில் நோட்டு விரித்து கலர் பென்சிலில் எச்சில் தொட்டு படம் வரைந்தனர்.

மூன்று மணிக்கு மேல் விஜய் மறுபடி விசிட்டர்ஸ் பார்க் வந்து உட்கார்ந்து கொண்டான். கேட்டையே பார்த்தான். பார்த்துக்கொண்டே இருந்தான்.

அஞ்சரை மணிக்கு ஒரு சிறுமி வந்து "விஜய் உன்னை மேரி சிஸ்டர் கூப்புடறாங்க உன் அம்மா போன்ல பேசுறாங்களாம்" என்ற போது வேகமாக ஓடினான்.

" இங்கே வா விஜய். போன்ல பேசு. உங்க அம்மா பேசறாங்க" என்று மேரி சிஸ்டர் ரிசீவரை அவன் காதில் பொருத்தி அப்படியே வைத்துக்கொண்டு

"பேசு என்றாள்.

"அம்மா" என்றான்.

"விஜய். விஜய் டார்லிங்... ஸாரிம்மா கண்ணு. அப்பாவுக்கு திடீர்னு ஒரு பிசினஸ் வேலை வந்து பம்பாய் போய்விட்டார். அடுத்த வாரம் வர்றோம் என்ன?"

பேசாமல் இருந்தான்.


"விஜய் விஜய் பேசுப்பா...."

" நான் வர்றேன் சிஸ்டர்" என்று நடந்து அறையை விட்டு வெளியேறி தன் ஹாலுக்கு வந்தான் விஜய்.

குமாரசாமி கை நிறைய பிஸ்கெட் பாக்கெட்டுகளை வைத்துக் கொண்டு எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தான்.

" இந்தா விஜய்"

"வேணாம்" என்று தன் கட்டிலில் ஏறி அமர்ந்தான். அருகில் கப்போர்டில் காலையில் செருகின மலர்கள் எல்லாம் வாடிப்போய் தலை கவிழ்ந்திருக்க.... அவைகளை ஒவ்வொன்றாகப் பிய்த்துப் போட்டுவிட்டு... "அம்மா" என்று விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தான்.




தமிழ்நாட்டின் நட்சத்திர எழுத்தாளர்களில் ஒருவர் பட்டுக்கோட்டை பிரபாகர். தமிழக இதழ்கள் அவரிடம் கதைகேட்டு காத்திருக்கும் போதும், அவர் 'தினமுரசு' வாசகர்களுக்கு தந்துள்ள சிறுகதை இது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## மருத்துவப் பக்கம் — அறிந்து கொள்ளுங்கள்

# ஒற்றைத் தலைவலியா உங்களுக்கு?





### எப்படித் தடுப்பது?

எண்சாண் உடலுக்கும் சிரசே பிரதானம் என்னும் பழமொழி தலையின் அருமை பெருமை யை உணர்த்துகிறது. ஆனால் அவ்வாறான தலைக்கு வருகின்ற தலைவலிகளில் ஒற்றைத் தலைவலி பிரச்சினை யானது.

தலைவலியால் மாணவ மாணவியர்கள் முதல் மாடு மேய்ப்பவர் வரை பாதிக்கப் படுகிறார்கள்.

சில நேரங்களில் ஏனைய நோய்களின் அறிகுறியாகவும் தலைவலி வருவதுண்டு. இரத்தஅழுத்தம், இரத்த சோகை, மூளைக்காய்ச்சல், தலைக்குள் கட்டி, இரத்த சோகை போன்றவற்றாலும் தலைவலி ஏற்படலாம்.

இந்த நோய்கள் இல்லாமல் வருவது பிரதான தலைவலி.

இதிலும் பல ஆண்டுகள், பல மாதங்கள் தொடர்ந்து இருக்கக் கூடிய ஒற்றைத் தலை வலியில் இரண்டு வகை உண்டு.

ஒன்று வெள்ளை நிற ஒற்றைத் தலைவலி.

இரண்டாவது, சிவப்பு நிற ஒற்றைத்தலைவலி.

சிவப்பு நிற ஒற்றைத் தலை வலி எப்போது பார்த்தாலும் ஒரே பக்கத்திலே தான் வரும். அநேகமாக இது ஆண்களுக்குத் தான் வரும். குடி , போதைப் பழக்கம் போன்றவை இதனைத் தூண்டி விடும்.

இது ஒரே நாளில் மூன்று நான்கு தடவை கூட வரும். பத்துப் பதினைந்து நிமிடம் வரை நீடிக்கும்.

மூக்கிலும், கண்களிலும் நீர் வடிந்து கொண்டுஇருக்கும். புடைத்து வீங்கி இருக்கும்.

இந்தத் தலைவலி தாங்காமல் பலர் தற்கொலை செய்ய முயன்றதும் உண்டு.

இனி வெள்ளை நிற ஒற்றைத் தலைவலி பற்றிப்பார்ப்போம். இது அதிகமாகப் பெண்களைத் தான் பாதிக்கும்.

இது நாலில் இருந்து ஆறு மணி நேரம் வரை நீடிக்கும். வலி வரும் போது பாதிக்கப் பட்டவர்கள் அசையாமல் கூட இருப்பார்கள். பெண்குழந்தை களுக்கு அவர்கள் பருவம் எய்துவதற்கு முன் இது வருவதுண்டு.

ஒற்றைத் தலைவலி உள்ள குடும்பத்தினர் அதே பாதிப்புள்ள குடும்பத்தினரோடு திருமண உறவு போன்றவற்றை வைத்துக்கொள்ளக் கூடாது.

வெயில், குளிர், பசி ஆகிய வற்றாலும் தலைவலி வரலாம். அதிகமாக யோசிப்பது, தவறான உணவு வகைகளை சாப்பிடுவது போன்றவற்றாலும் வரலாம்.

பெண்களுக்கு மாதவிடாய் நேரத்தில் வரலாம். உடல் பயிற்சியின் போது, உடலுறவின் போது தலைவலி ஏற்படுவதுண்டு.

பழக்கமாகி விட்ட உணவு மற்றும் குறித்த நேரத்தில் தூங்கி நேரமுறையை கடைப்பிடிப்பது போன்றவற்றாலும் தலைவலியை தவிர்க்கலாம்.

### புற்றுநோய் தொற்றுநோயா?

புற்றுநோய் தொற்றுநோய் அல்ல. உணவு முறைகளாலும் நல்ல பழக்கவழக்கங்களினாலும் புற்நோயைத் தடுத்து விடலாம். கீரை வகைகளை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் மலக்குடலில் வரும் புற்று நோயைத் தவிர்க்கமுடியும். கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளாமல் இருந்தால் மார்பகத்தில் வரும் புற்று நோயைத் தவிர்க்கலாம். காரம் மிகுந்த உணவுகள், கருகித் தீய்ந்த-புகை படிந்த உணவுகள், மது அருந்துதல் போன்றவற்றைத் தவிர்த்தால் இரைப்பைப் புற்று நோய் வருவதில்லை. இளம் வயதில் திருமணம் செய்வதைத் தவிர்ப்பதன் மூலம் பெண்களுக்கு கர்ப்பைப்பை வாய்ப்புற்று நோய் வருவதைத் தடுக்கலாம்.

### மருத்துவர் கொடுத்த முத்தம்



*முத்தம் குழந்தைக்கு கொடுக்கலாம்.*

*தண்டனை இல்லை. ஆனால் குமரிக்கு கொடுக்கலாமோ? கூடாது*

*தன்னிடம் மருத்துவம் பார்க்க வந்த ஒரு அழகியின் கன்னத்தில் 'இச்' என்று பலவந்த முத்தம் கொடுத்தாராம் ஒரு டாக்டர். இது நடந்தது கனடாவில்*

*பலவந்த முத்தத்துக்கு அபராதம் 60 ஆயிரம் ரூபா.*

*முத்தம் கொடுத்த டாக்டர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். அந்நிய நாட்டில் அடாத ஆசை.*

### எலி கடித்தால்.......

நாய், பூனை, எலி போன்றவைகள் நம்மை கடித்து விட்டால் உடனே செய்ய வேண்டியது என்ன தெரியுமா?

* கடிபட்டஇடத்தை உடனே சுத்தமான நீரில் கழுவி விட வேண்டும். டெட்டால், ஸ்பிரிட் போன்ற கிருமிநாசினிகள் கொண்டும் காயத்தை கழுவலாம்.
* காயத்தின் மீது இருக்கும் ஈரம் போக பஞ்சு கொண்டு மெதுவாக துடைக்கவும்.
* சுத்தமான துணியால் காயத்தை சுற்றி கட்டிவிடவேண்டும். பிறகு டாக்டரிடம் காயம் பட்டவரை அழைத்துச் சென்று நோய் எதிர்ப்பு ஊசி போட்டுக் கொள்ள செய்யவும்.

## சாதித்த பெண்மணி




இலங்கையின் முதல் பெண் பிரதமர் என்கின்ற பெருமைக் குரியவர் திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்கா. அதுமட்டுமல்ல உலகின் முதல் பெண் பிரதமரும் அவர்தான்.

இப்போது அவரது புத்திரி சந்திரிகா சாதனை படைக்க புறப்பட்டுள்ளார். நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்களில் அதிக விருப்புவாக்குகளைப் பெற்றிருப்பவர் சந்திரிகா தான். அதுமட்டுமல்ல மாகாண சபை தேர்தல் வரலாற்றில் அதிக விருப்புவாக்குகள் பெற்றவரும் அவர்தான். பெற்ற வாக்குள் இரண்டு லட்சத்து தொண்ணூற்றி எட்டாயிரத்து நானூற்றி ஐம்பத்து ஏழு.

கடந்த பொதுத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா பெற்ற வாக்குகளைவிட, சந்திரிகா எண்பத்தி நாலாயிரத்தி அறுபத்தேழு வாக்குள் அதிகம் பெற்றுள்ளார். தாய் எட்டடி பாய்ந்தால்....? வெல் டன் சந்திரிகா.

## லேடீஸ் ஸ்பெசல்

### மகளிர் கிரிக்கெட்



"பெண்களால் முடியாதது எதுவுமில்லை. சரியான வாய்ப்புக்கள் தரப்பட்டால் கிரிக்கெட்டிலும் பெண்கள் சாதிக்க முடியும்" என்கிறார் இந்தியாவில் உள்ள மகளிர் கிரிக்கெட் சங்க நிர்வாகியான ஷீலு ரங்கநாதன்.

கிரிக்கெட் ஆடவர் விளையாட்டாக இருந்த காலம் மாறிவிட்டது.

கிரிக்கெட் ஆண்களால் மட்டுமே விரும்பப் படுவதாகச் சிலர் நினைக்கிறார்கள். அது தவறு.

கிரிக்கெட் வீரர்களுக்கு பெண் ரசிகைகள் ஏராளம். பிரபலமான பெண்கள்கூட கிரிக்கெட் மீது பைத்தியமாக இருக்கிறார்கள்.

இந்தி திரையுலகின் கவர்ச்சித் தாரகை நீனா குப்தாவுக்கு மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் விவியன் றிச்சர்ட்ஸ் மீது மோகம். விளைவு அவரது குழந்தைக்குத் தயானார்.

தமிழக முதல்வர் ஜெயராம் ஜெயலலிதாவும் ஒரு கிரிக்கெட் அபிமானி.

இலங்கையில் குறிப்பாக தலைநகரான கொழும்பில் மகளிர் கிரிக்கெட் மெல்ல பிரபலமாகி வருகிறது.

என்றாலும் கிரிக்கெட் விளையாடும் பெண்களுக்கு பொதுவாக ஒருகுறை: பாடசாலைகள், கல்லூரிகளில் தரப்படும் ஊக்கம் போதாது என்கிறார்கள்.

### அவுஸ்திரேலியப் பெண்களுக்கு பூனைகள் சிறந்த கூட்டாளிகள்

அவுஸ்திரேலியப் பெண் ஒரு ஆணை விட பூனையின் மீது அதிக கவனம் செலுத்துகிறாள். இவற்றை ஆரத்தழுவி அரவணைப்பதை பெண்கள் விரும்புகின்றனர் என்றும் தங்கள் கூட்டாளிகளாக பூனைகளை வைத்திருக்க விரும்புகின்றனர் என்றும் அண்மையில் நடத்தப் பட்ட கணக்கெடுப்பிலிருந்து தெரிய வருகிறது.

பூனை அதிசயிக்கத்தக்க தோழனாக விளங்குவதாக கணக்கெடுப்பில் கலந்து கொண்ட 94 சதவிகிதமான பெண்கள் கூறுகின்றனர். மேலும் 95 சதவிகிதமான பெண்கள் பூனைகளால் தாங்கள் ஆனந்தமும் மகிழ்ச்சியுமடைவதாகத் தெரிவித் துள்ளனர்.

இந்தக் கணக்கெடுப்பையும் ஆராய்ச்சியையும் மேற்கொள்ளும் குழுவின் ஆணையாளர் ஜெரேமி கொக்ஸ், வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகள் மீது இத்தகைய இறுக்கமான நெருக்கம் இருப்பதை தான் இதுவரை கண்டதில்லை என்கிறார். "மிகவும் சக்திவாய்ந்த உணர்ச்சியுடன் கூடிய உறவினைக்காண முடிகிறது" என்று கூறுகிறார் அவர்.

### சுதந்திரச் செய்தி

"மெல்ல இசைக்கும் வளையல்களும்- காதில்
ரகசியம் முனங்கும் ஜிமிக்கிகளும்
சொல்லாத செய்தியைச் சொல்லுகிறேன்- உங்கள்
சுதந்திரச் செய்தியைச் சொல்லுகிறேன்.....

இறக்கை வெட்டிய கிளிகளாய்- நீங்கள்
எத்தனை காலம் இக் கூண்டுக்குள்ளே
பறக்கத் துடிக்கும் பறவைகளே- இங்கு
பரந்து கிடக்குது பிரபஞ்சம்".

-இன்குலாப்-

### புரட்சியாளனின் மனைவி

கொடிய முதலாளித்துவ நிர்வாக முறையினால் சமூகத்தில் விளை விக்கப்படும் அநீதிகள் மறைக்கப்படுவதற்கெதிராகவும், முதலாளித்துவ சுரண்டல்களுக்கெதிராகவும் போராடிவந்த முற்போக்குவாதி, தனது மனைவியையும் இரு குழந்தைகளையும், தனியே விட்டு இறந்து விடுகிறான்.

குழந்தைகளை பராமரித்து வந்த மனைவியும் சிறிது காலம் சென்ற பின் நோய்வாய்ப்பட்டு இரத்தவாந்தி கண்டு படுக்கையில் விழுந்து விடுகிறாள்.

அவ்வாறு படுக்கையில் வீழ்ந்து விட்ட மனைவி தனது இரு பிள்ளைகளையும் அழைத்து

நான் கூறியது அனைத்தும் உங்கள் இருவருக்கும் நினைவிருக்கிறது தானே!

ஆம் அம்மா! என்று இரு பிள்ளைகளும் பதிலளித்தார்கள்.

நான் மீண்டும் உங்களுக்கு கூறுகிறேன் அப்பாவைப்போல் துணிந்து நில்லுங்கள் அநீதிக்கெதிராக கிளர்ந்து எழுங்கள் எனக் கூறி மிகுந்த சிரமத்துடன் மூச்சை உள்வாங்கி வெளிவிடுகிறாள்.

என் தங்கக் குழந்தைகளே என் பக்கம் பாருங்கள், என் அருகே வாருங்கள் உங்கள் முகத்தை நான் பார்க்கும் படி நின்று சிரியுங்கள்...............சற்றுப் பலமாக சிரியுங்கள் இந்தக் கதவுக்கு அப்பாலே! அநீதி ஆட்சி செய்யும் உலகம் அமைந்திருக்கிறது.

பத்திரமாக வாழுங்கள்......... அதைப் போல் அவற்றை எதிர்த்து போராடுங்கள். உங்கள் உரிமைகளை மறுப்பவர்களுக்கெதிராக கிளர்ந்தெழுங்கள் எனக் கூறி பேச்சுவிட்டாள்.

மெல்ல மெல்ல அவளின் கண்கள் மூடி பகல் அவளுக்கு இருளாகிய நிலை படிப்படியாக அவளின் உயிர்பிரிந்து செல்கிறது.

***இந்தியா ஜயந்தி ஆசிரியரின் படைப்பின் பாத்திரம்.***



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மைக்கேல் ஜாக்சன்

## கிறங்க வைக்கும் பொப் பாடகர்



மைக்கேல் ஜாக்ஸன் உலகெங்கும் உள்ள பல லட்சக் கணக்கான இளைஞர்களையும் யுவதிகளையும் கிறங்கடித்துக் கொண்டிருக்கும் பொப் பாடகர்.

1982இல் மைக்கேல் ஜாக்ஸன் பாடி பதிவு செய்த பாடல்களின் தொகுப்பு வெளியானது. அந்த இசைத்தட்டு நாலு கோடிக்கு மேல் விற்பனையாகியது. அது ஒரு உலக சாதனை. கின்னஸ் எனப்படும் உலக சாதனைப் புத்தகத்திலும் அந்த சாதனை பொறிக்கப்பட்டிருக்கிறது.

மைக்கேல் ஜாக்ஸன் பிறந்தது 1958ஆம் ஆண்டு. பிறந்த இடம் அமெரிக்காவில் உள்ள இண்டியானா மாநிலத்தில் உள்ள கேரி என்னும் ஊரில்.

அவரது குடும்பம் இசைத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்ததால் எட்டு வயதில் அவரும் பாடத் தொடங்கி விட்டார். ஜாக்ஸனும் அவரது நான்கு சகோதரர்களும் ஜாக்ஸன் ஐந்து என்ற இசைக் குழுவை அமைத்து பல இசை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

ஜாக்ஸனுக்கு பத்து வயதான போது அந்தக்குழுவில் இருந்து பிரிந்து தனியாகவே பாட ஆரம்பித்தார்.

நிற வெறியர்களால் இளமைப் பருவத்தில் மைக்கேல் ஜாக்ஸனும் பாதிக்கப்பட்டார். ஆனால் இப்போது வெள்ளை இன இளைஞர்களின் அபிமானத்துக்குரிய பாடகராகவும், வெள்ளை இன யுவதிகளின் கனவில் தோன்றி தொல்லைப் படுத்தும் நாயகனாகவும் புகழேணியின் உச்சியில் இருக்கிறார்.

மைக்கேல் ஜாக்ஸனைப் பற்றி ஏராளமான கிசுகிசுக்கள் இருக்கின்றன. இதோ அவற்றில் சில:-

* மிகுந்த கூச்ச சுபாவம் உள்ளவர்.
* தனது முகத்தின் தோற்றத்தை, குறிப்பாக மூக்கின் தோற்றத்தை மாற்றுவதற்காக பலமுறை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்.
* தனது இளமைத் தோற்றத்தைப் பாதுகாப்பதற்காக பிரமிற் வடிவமுள்ள கூடாரத்தில், சுத்தமான ஒட்சிசன் வாயுவை சுவாசித்தபடி தூங்குகிறார்.

இவ்வாறான கிசுகிசுக்களை எல்லாம் அவர் மறுத்திருக்கிறார். நானும் உங்களைப் போல் ஒரு மனிதன்தான். பாடலை எழுதுவதிலும், ஆடுவதிலும் வேண்டுமானால் எனக்கு திறமை இருக்கலாம். ஏனைய விஷயங்களில் நானும் உங்களைப் போலத்தான் என்று அவர் கூறியிருக்கிறார்.

ஜாக்ஸனுக்கு குழந்தைகளிடத்தில் மிகுந்த பிரியமும், அன்பும் உண்டு. வசதி வாய்ப்பற்ற அறக்கட்டளைகளுக்கு நன்கொடைகளை வாரி வழங்கி வருகிறார்.

1980 முதல் 1990 வரை உலகை அதிகமாக மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய கலைஞர் என்று அவருக்குப் பட்டம் வழங்கப்பட்டது. அந்தப் பட்டத்தை வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதியின் இருப்பிடமான வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்பட்டார். அங்கு அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜோஜ் புஷ் அவரைக் கௌரவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பில் கிளின்டன் பொறுப்பேற்றபோது அந்த வைபவத்தில் தோன்றி மைக்கேல் ஜாக்சன் நடன விருந்து வழங்கினார்.

மைக்கேல் ஜாக்ஸன் தனது சுயசரிதையையும் எழுதியுள்ளார். அதன்பெயர் மூன் வோக்கிங்.



## மூச்சுவிட முடியாத நிலை

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மனிலாவில் போக்குவரத்தை ஒழுங்கு செய்யும் பணியில் ஈடுபடுவோரும் வீதிகளைச் சுத்திகரிக்கும் ஊழியர்களும் இப்பொழுது விசித்திரமான முகமூடிகளை அணிந்து காணப்படுகின்றனர். இம்முக மூடிகள் நகரின் நிர்வாகிகளால் வழங்கப்பட்டவையே. வீதிகளில் செல்லும் வாகனங்கள் அதிகரித்துள்ளமையினால் அவை கக்கும் புகைகளினால் சூழல் பாதிப்படைகிறது. இதனால் ஏற்படும் விளைவுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கவே இவர்களுக்கு பாதுகாப்புக் கவசங்களாக முகமூடிகள் தரப்பட்டுள்ளன.


## கறுப்பின் எதிரிகள்

தலைமுடி கறுப்பாக இருப்பதை விட பழுப்பாகவோ, சிவப்பாகவோ அல்லது வெளுப்பாகவோ இருப்பதைத் தான் அமெரிக்க பெண்கள் பெரிதும் விரும்புகின்றனர். இறக்குமதி செய்யப்படும் கறுப்பு முடியை விசேச சாயக்கலவைகளைப் பயன்படுத்தி மேற்சொன்ன நிறங்களில் மாற்றி 'விக்'குகளைத் தயாரிக்கின்றனர்.



## முடிச்சு மீன்

ஹாக்பிஸ் என்ற இவ்வகை மீன் தன் வாலுக்கும், தலைக்கும் இடைப்பட்ட உடற்பகுதியில் முடிச்சுப் போட்டுக் கொள்ளும் விநோத பழக்கம் உடையது. இந்த மீனுக்கு முதுகெலும்பு கிடையாது. பெருங்கடலின் அடிமட்டத்தில் மட்டுமே இந்த மீன் வாழுகிறது.



## எழுதத் தெரியாத அறிஞர்கள்

வரலாற்றில் மிகப்பெரிய அறிஞர்களாகக் கருதப்படும் ஹோமாருக்கும், சோக்கரட்டீசுக்கும் எழுதவோ, படிக்கவோ தெரியாது.

அவர்கள் கூறியதைப் பிறர் கேட்டு எழுதியவைதான் இன்று உள்ள அவர்களது சிந்தனைகள் ஆகும்.

# தகவல் பெட்டி

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ஆஸ்டர் எதிரிகளின் மூக்கை உடைப்பதில் புகழ்பெற்றவர். ஒருமுறை மற்றொரு உறுப்பினர் அவரிடம் கிண்டலாக "பன்றியின் கால்களில் எத்தனை விரல்கள் இருக்கும்" என்று கேட்டார்.

"பூட்சைக் கழற்றிவிட்டு உங்கள் காலைப் பார்த்தாலே தெரியுமே" என்றார் ஆஸ்டர் கிண்டலாக.




இங்கிலாந்து இளவரசர் சார்ல்ஸ்–டயானா தம்பதிகள் தங்கள் மகன்களை யாருடைய பொறுப்பில் வளர்ப்பது என்று டெலிபோனில் நடத்திய வாக்குவாதத்தை லண்டன் உளவுத்துறை கண்காணித்ததாக லண்டன் பத்திரிகைகள் வரிந்து கட்டிக் கொண்டு செய்தி வெளியிட்டிருப்பதை படத்தில் காணலாம். லண்டன் உள்துறை அமைச்சர் கென்னத் கிளார்க் இத்தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என்று மறுத்துள்ளார்.

## மினி பொக்ஸ்

(1) ஜெர்மனிய சர்வாதிகாரியான ஹிட்லர் பிறந்தது ஆஸ்திரியாவில்.

(2) ஐரோப்பாவில் பிறந்து, ஆசியாவில் இறந்து, ஆபிரிக்காவில் அடக்கம் செய்யப்பட்ட மன்னன் யார் தெரியுமோ? மகா அலெக்ஸான்டர்.

(3) இந்திய முன்னாள் பிரதமர் மொறார்ஜி தேசாய்க்கு இப்போது வயது 97.

(4) பம்பாய் கிரிக்கெட் போட்டியில் இரட்டைச் சதம் போட்டு (டபிள் செஞ்சரி) வெளுத்து வாங்கிய வினோத் காம்பிளி ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்.

(5) உலகில் சைக்கிள்கள் அதிகமாக உள்ள நாடு சீனா.

(6) கடிகாரத்தின் நிமிடமுள் 18ஆம் நூற்றாண்டில் தோன்றியது.

(7) விமான போக்குவரத்தை முதலில் ஆரம்பித்த நாடு பிரிட்டன். ஆண்டு 1919.

(8) உடலை விட நீளமான வால் கொண்ட விலங்கு எது? குரங்கு.

(9) அகதா கிறிஸ்டி என்ற நாவல் ஆசிரியரின் நாவல்கள் தான் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

(10) முதல் முதலாக நீச்சல் உடை அணிந்து தமிழ் திரை உலகை கலக்கியவர் கே.ஆர்.செல்வம். ஆண்டு 1938.

(11) அலெக்ஸான்டர் டுமாஸ் என்னும் புகழ் பெற்ற பிரெஞ்ச் எழுத்தாளர் தனது வாழ்நாளில் எழுதிய நூல்களின் எண்ணிக்கை-1200.

(12) அரிசிப் பானையில் மிளகைப் போட்டால் பூச்சியே வராது.

(13) அதிகாலை நேரத்தில் தான் வாத்துக்கள் முட்டை இடும்.

(14) மலேசியா நாட்டில் சண்டையிட்டுக் கொண்டவர்கள் தங்களுக்குள் வெற்றிலையைப் பரிமாறிக் கொண்டால் அவர்கள் சமாதானமாகி விட்டார்கள் என்று அர்த்தம்.

(15) ஆபிரிக்காவின் ஹோட்டல்களில் சிறந்த மாலை உணவாக வழங்கப்படுவது எறும்பு வறுவல்.

மினி பொக்சுக்கு நீங்களும் குட்டித் தகவல்களை அனுப்பி வைக்கலாம். சிறந்தவை பிரசுரமாகும்.

## பழமொழிகள் பத்து

1. காய்த்த மரத்திற்குத்தான் கல்லடி விழும்.
2. கள்ளனுக்குத் தெரியும் களவு முறை.
3. காட்டுக்குப் புலி ஆதரவு. புலிக்குக் காடு ஆதரவு.
4. அதிகாரம் இல்லாவிட்டாலும் பரிவாரம் வேண்டும்.
5. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
6. பகையாளிக் குடியை உறவாடிக் கெடு.
7. விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவதா?
8. யதார்த்தவாதி வெகுஜன விரோதி.
9. எறும்பு ஊர கல்லும் தேயும்.
10. இரப்பவனுக்குப் பஞ்சமில்லை.

## உடைத்துப் பார்த்து வாங்கலாம்.

சுவிஸ் என்றால் கடிகாரம். கடிகாரம் என்றால் சுவிஸ் என்று கூறப்படுவது பொய்யல்ல. உலகில் தற்போது உற்பத்தியாகும் கடிகாரங்களில் 70 வீதமான கடிகாரங்கள் சுவிற்சலாந்தில் தான் செய்யப்படுகின்றன. சுவிற்சலாந்தில் நூற்றியைம்பது கடிகாரத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தக் கடிகாரத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கடுமையான விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அந்த விதிகளைச் சொன்னால் உங்களுக்கு வியப்பாகத் தான் இருக்கும். இதோ விதிகள்:

பேசுவதோ, புகைபிடிப்பதோ, தும்முவதோ, கொட்டாவி விடுவதோ கூடாது. இவற்றால் கடிகாரத்தின் மிக நுண்ணிய பாகங்களில் அதிர்வுகள் ஏற்பட்டு அவை இணைக்கப்படும்போது ஒழுங்கமைவு பாதிக்கப்படுகிறதாம்.


பலமாக மூச்சு விடக்கூடாது.

வாசனைத் திரவியங்களை உபயோகிக்கக் கூடாது.

அனைத்திற்கும் மேலாக தொழிலாளிகள் ஒவ்வொருவரும் வேலை நேரத்தின் போது தமக்கெனக் கொடுக்கப்பட்ட முகமூடியை அணிந்து கொள்ள வேண்டும்.

சமீபத்தில் தயாரிக்கப்பட்ட தமது கைக்கடிகாரங்கள் உடையாதவை உறுதியானவை என்கிறார்கள் சுவிசிலுள்ள சில தயாரிப்பாளர்கள். சரி அதனை எப்படிப் பரிசீலிப்பது?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## கனவுகள் இல்லை

முன்னைய பிரபல குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் இப்போது சிறையில் காலம் தள்ளுகிறார். கறுப்பழகி டிசிறி வொசிஸ்டன்ட் மீது பலாத்காரம் புாந்ததாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

டைசன் தற்போது முதன் முறையாக உள்ளே இருந்தபடி பேட்டி கொடுத்திருக்கிறார்.

அவர் மதம் மாறியதாக வெளியே பேசப்படுவது பற்றிக் கேட்டபோது, பத்திரிகைகளில் வருவதெல்லாம் உண்மைகளாக இருப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார்.

மற்றொரு கேள்விக்கு பதில் சொல்லும் போது, மீண்டும் உலக அதி பார குத்துச்சண்டை வீரராக வேண்டும் என்று தான் கனவு காண வில்லை என்று கூறியிருக்கிறார். கனவு காண்பது தனது வழக்கமாக இருந்ததும் கிடையாதாம்.

## சர்வதேச கிரிக்கெட் வீரர் வரிசையில் ஏழு இலங்கையர்கள்!



கிரிக்கெட் விளையாட்டுத்துறையில் சர்வதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 40 விளையாட்டு வீரர்களில் 07 இலங்கையர்களும் உள்ளடங்குகின்றதோடு சர்வதேச தரத்திலான சிறந்த பந்து வீச்சாளர் வரிசையில் இலங்கையைச் சார்ந்த நால்வரும் இடம்பெற்றுள்ளனர்.

குபர்ஸ் லைபிரான்ட் என்னும் சர்வதேச நிறுவனத்தின் தரப் படுத்தலின் படி இலங்கை டெஸ்ட் குழுவின் ஆரம்ப துடுப்பாட்டக்காரரான திரு ரொசான் மகாநாம சர்வதேச துடுப்பாட்டக்காரர்களின் வரிசையில் 13வது இடத்தை பெற்றுள்ளார். இலங்கை இங்கிலாந்திற்கெதிராக நடத்தப்பட்ட டெஸ்ட் போட்டியின் பின்பு 29 போட்டியாளர்களை கடந்து சென்ற திரு. ஹசான் திலக்கரத்னாவிற்கு சர்வதேச துடுப்பாட்டக்காரர்களின் வரிசையில் 16வது இடம் கிடைக்கப் பெற்றுள்ளது.




இத்தரப்படுத்தலின் படி முதலாவது துடுப்பாட்டக்காரராக மேற்கிந்திய தீவுகள் தலைவர் திரு. ரிச்சி ரிச்சர்ட்சன் தெரிவாகியுள்ளார். சிறந்த பந்து வீச்சாளராக பாகிஸ்தான் அணியின் உபதலைவர் திரு. வக்கார் யூனூஸ் தெரிவாகியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் கொழும்பில் நடந்த இலங்கைக்கும் இங்கிலாந்திற்குமான டெஸ்ட் போட்டியின் அடிப்படையிலேயே மேற்கூறிய குபாஸ் லைப்பிராண்டோ தரப்படுத்தல் மேற்கொள்ளப் பட்டள்ளது. இப்போட்டியில் இங்கிலாந்து அணிக்கு மிகக் குறைந்த புள்ளிகளே கிடைக்கப் பெற்றிருந்ததோடு இலங்கை அணிக்கு ஏனைய நாட்டு அணிகளை விட கூடுதலான புள்ளிகள் கிடைக்கப்பெற்று முன்னணியில் திகழ்ந்து கொண்டிருந்தன.

சர்வதேச மட்டத்தில் சிறந்த துடுப்பாட்டக்காரர்கள் வரிசையில் திரு. சந்திக்க ஹதுருசிங்காவிற்கு 33வது இடமும் திரு. சனத் ஜயசூரியாவிற்கு 35வது இடமும் கிடைக்கப் பெற்றுள்ளது.

டெஸ்ட் போட்டி பந்துவீச்சாளர் வரிசையில் திரு. முத்தையா முரளீதரனுக்கு 42வது இடமும் கிடைக்கப்பெற்றது. சர்வதேச மட்டத்தில் குபர்ஸ் லைப்பிரான்டோ தரப்படுத்தலின்படி தெரிவு செய்யப்பட்டு முன்னணியில் திகழும் 10 துடுப்பாட்டக்காரர்களினதும் பந்து வீச்சாளர்களினதும் பெயர்களும் புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன.



| துடுப்பாட்டக்காரர்கள் | அணிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. றிச்சி றிச்சர்ட்சன் | மேற்கிந்திய தீவுகள் | 808 |
| 2. கிரஹாம் கூச் | இங்கிலாந்து | 752 |
| 3. சலீம் மாலீக் | பாகிஸ்தான் | 728 |
| 4. டேவிட் பூன் | அவுஸ்திரேலியா | 723 |
| 5. ரொபின் ஸ்மித் | இங்கிலாந்து | 710 |
| 6. ஜாவெட்மியான்டாட் | பாகிஸ்தான் | 684 |
| 7. சொகைப் முகமட் | பாகிஸ்தான் | 671 |
| 8. அலன் போர்டர் | அவுஸ்திரேலியா | 659 |
| 9. மார்டின் குரோ | நியூசிலாந்து | 655 |
| 10. சச்சின் டென்டுல்கர் | இந்தியா | 641 |

| பந்து வீச்சாளர்கள் | அணிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. வக்கார் யூனூஸ் | பாகிஸ்தான் | 902 |
| 2. கேர்ட்லி அம்புரோஸ் | மேற்கிந்தியத் தீவுகள் | 901 |
| 3 அனில் கும்பிளே | இந்தியா | 836 |
| 4. இயன் பிஷப் | மேற்கிந்தியத் தீவுகள் | 825 |
| 5. வாசிம் அக்ரம் | பாகிஸ்தான் | 751 |
| 6. மேர்வ் ஹியூஸ் | அவுஸ்திரேலியா | 713 |
| 7. கிரேய்க் மக்டர்மட் | அவுஸ்திரேலியா | 696 |
| 8. புறூஸ் றீட் | அவுஸ்திரேலியா | 694 |
| 9. கபில் தேவ் | இந்தியா | 616 |
| 10. அலன் டொனால்ட் | தென் ஆபிரிக்கா | 604 |

சிறுகதை

# காதலுக்கும் கண் வேண்டும்



காயத்திரி

அறிமுக எழுத்தாளர்

"எழுதிறதுக்கு ஒரு பேப்பர் இருக்காது. என்ன வீடோ இது."

அலுத்துக் கொண்டே பேப்பரைத் தேடினாள் பரமேஸ்வரி. பிரேமாவின் புத்தக அலுமாரிக்குள் வெற்றுப் பேப்பர் இருக்குமோ என்று அலுத்துக் கொண்டே தேடிய போது உள்ளே இருந்த புத்தகங்கள் சரிந்து விழுந்தன.

"நல்ல வேலை." கடைக்குட்டி ராமு கேலி செய்தான்.

"நாலு பொருள் சொன்னா ஞாபகத்தில் வச்சு வாங்கி வரத் தெரியாது. படிக்கிறாராம்." அவனை திட்டியபடி விழுந்த புத்தகங்களை அடுக்கிக் கொண்டு இருந்தபோது ஒரு புத்தகத்தின் உள்ளே இருந்து அந்த மடித்த கடிதம் கீழே விழுந்தது.

எடுத்து வைக்கப் போனவள் என்னவாக இருக்கும் என்ற யோசனை வரவே...... பிரித்தாள்.

**அன்பே பிரேமா,**

கல்லூரி வாசலில் உனக்காகக் காத்திருக்கும் என்னைக் கண்டு கொள்ளாமல் போகிறாயே கண்ணே. உன் பார்வை ஒன்றே போதும் என்று காத்திருக்கும் என் மீது கடைக்கண் பார்வையை வீசிவிடு. என் இதயத்துக்கு உன் இதயத்தில் அபயம் கொடு.

***தவிப்போடு காத்திருக்கும். கண்ணன். (பெயர் எப்படி)***

"என்னம்மா பேப்பர் இல்லையே."

"பேப்பர் கிடைக்கலை நீபோய் நான் சொன்னதை ஞாபகத்தில வச்சு வாங்கிக் கொண்டு வா. போ."

ராமு சிட்டாய் பறந்தான்.

பதினாறு வயதில் மனசு கொம்பு தேடுதோ? பரமேஸ்வரிக்கு இருப்புக் கொள்ளவில்லை. பிரேமாவின் வருகைக்காக காத்திருந்தாள்.

வந்தாள்.

"இவ்வளவு நேரமும் எங்க போய்விட்டு வாறாய்"

"லைபிரரிக்கு"

"என்னடி இது" கோபமாய் கடிதத்தை நீட்ட, "என்னம்மா இது". வாங்கிப்படித்த பிரேமாவின் முகத்தில் அடர்த்தியான ஆச்சரியம்.

"யாரம்மா இதைத் தந்தது"

"அதைத்தான் நானும் கேக்கிறன்" உன்ரபுத்தகத்தில தான் கிடந்தது.

"என்னெண்டு வந்தது" யோசித்த பிரேமா,

"பஸ் ஸ்டாண்டில் நிக்கேக்க புத்தகத்தை சீமெந்த் பெஞ்சுக்கு மேல வைக்கிறனான். அந்த நேரத்தில தான் எனக்குத் தெரியாம யாரோ இதைச் செய்திருக்க வேணும்." மகளின் பேச்சில் பொய்யில்லை என்பது பரமேஸ்வரிக்குப் புரிந்தது.

"அவன் யார் எண்டு உனக்குத் தெரியுமோ."

"தெரியும்."

"யாரவன்"

"லட்சுமி ஸ்டோர்ஸ் முதலாளியின்ர மகன்."

"இதுக்கு முதல் எப்பவாவது இப்படி செய்தவனோ."

"இல்லை அம்மா இல்லை."

" நீ அவனோட பேசி இருக்கிறியோ."

"சத்தியமா இல்லை அம்மா. இந்த லெட்டர அவன் நேரில வந்து தந்திருந்தால் எட்டாக் கிழிச்சு மூஞ்சையில எடுத்து வீசி இருப்பன்" பிரேமா சொல்ல பரமேஸ்வரிக்கு மகா சந்தோசம்.

"அப்பாடா. இப்பதான் நிம்மதி. நீ வீட்டை இருந்து கொள் நான் பக்கத்தில போட்டு வாறன்."

கடிதமும் கையுமாக படியிறங்கினாள் பரமேஸ்வரி.

மாலையில் விசுவநாதன் வீடு திரும்பிய பொழுது பரமேஸ்வரி அவரிடம் எதையுமே சொல்லவில்லை.

எங்கே அம்மா சொல்லி விடுவாளோ என்று பயந்த பிரேமாவும், எதுவும் நடக்காதது போல் தனது றூமில் இருந்து புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

"விசுவநாதன், விசுவநாதன்." குரல் கொடுத்தபடி வடிவேலு வந்து கொண்டிருந்தார்.

பரமேஸ்வரி அதிர்ந்து போனாள்.

வடிவேலுவின் குரல் கேட்டு மெல்ல எட்டிப் பார்த்த பிரேமாவின் முகத்தில் வெளிச்சம் காணாமல் போய் இருந்தது.

விசுவநாதன் ஒரு மரியாதையோடு எழுந்து நின்று வடிவேலுவை வரேவற்றார்.

"என்ன ஐயா இவ்வளவு தூரம். ஆள் அனுப்பி இருந்தா நானே வந்திருப்பேனே." விசுவநாதனின் குரலில் அளவுக்கு மீறின பணிவு.

"ஆள் அனுப்பி றோட்டில பேசிற விஷயம் இல்லை இது."

"ஐயா இருங்கோ"

இருந்தார். தொண்டைய ஒரு முறை கனைத்துக் கொண்டு ஆரம்பித்தார்.

"இஞ்ச பார் விசுவநாதன் என்ரபிள்ளை உன்ர பெண்ணுக்கு ஏதோ லவ் லெட்டர் எழுதிப் போட்டானாம். விஷயம் உன்ர துணைவியாருக்கு தெரிஞ்சிருக்கு. கடிதத்தோட என்ர வீட்டுக்கு வந்து சீறிப் பாய்ஞ்சிருக்கிறாவாம். எல்லாத்துக்கும் என்ர பிள்ளைமட்டும் தான் காரணம் எண்டு சொல்லுறது நல்லா இல்லை.

விசுவநாதனுக்கு தலை சுற்றுவது போல் இருந்தது. என்ன இது. எனக்குத் தெரியாமல் எதுவெல்லாமோ நடந்திருக்கிறது. நினைத்துக் கொண்டே பரமேஸ்வரி மீது ஒரு பார்வையை வீசினார்.

"பிரேமான்ர புத்தகத்தில ஒரு லெட்டர் இருந்தது. தனக்குத் தெரியாமல் தான் அது நடந்தது எண்டு சொன்னவள். உங்களுக்கு தெரிஞ்சா பெரிய பிரச்சினை ஆயிடும் என்று பயந்து போனன். அதுதான் நானே நேரில போய்...."

விசுவநாதன் கோபத்தில் உதட்டைக் கடித்துக் கொண்டார்.

வடிவேலு சிரித்தார்.

"பெண் புத்தி பின் புத்தி" சொல்லிக்கொண்டே வடிவேலு தன் கையில் இருந்த பையைப் பிரித்தார். உள்ளே இருந்து சில கடிதங்கள் விழுந்தன. வடிவேலுவின் உதட்டில் இருந்து ஒரு கேலிச் சிரிப்பு உதிர்ந்தது.

"இதெல்லாம் உங்கட பெண் எழுதின கடிதங்கள். நீங்கள் தான் கண்டிக்க வேணும். உங்களுக்கும் எங்களுக்கும் ஏணி வச்சாலும் எட்டாத தூரம். ஆசை இருக்கலாம். பேராசை கூடாது. நான் வாறன்."

விசுவநாதன் தலை குனிந்தார். அவமானம் ஒரு புறம். அதிர்ச்சி மறுபுறம்.

வீசப்பட்டிருந்த கடிதங்களில் சிலவற்றை புரட்டிப் பார்த்தார்.

அத்தனையும் பிரேமாவின் கையெழுத்துக்கள். காதல் ரசம் சொட்டும் வார்த்தைகள்.

ஆவேசமாக எழுந்தார். எதிரே பரமேஸ்வரி.

"எனக்குச் சொல்லாமல் ஏனடி அங்க போனனீ"

"உங்களுக்கு ...வந்து... உங்களுக்கு.....ஐயோ...."

கன்னத்தில் அடிவாங்கி அழுதாள்.

அவர் கடிதங்களோடு பிரேமாவின் அறைக்குப் போனார்.

"இதெல்லாம் உன்ர கையெழுத்துதானே"

".....”!

"சொல்லடி"

.......வார்த்தைகள் வர மறுத்தன. ஆம் என்பது போல் தலையாட்டினாள்.

"எவ்வளவு நாளா பழக்கம்."

"ஆ.....று.......மா.......ச......மா"

"அவனைப் பற்றி உனக்கு என்னடி தெரியும்."

"அவர் ......நல்லவர்."

"யாரடி நல்லவர். அப்பன் மிரட்டின உடன் நீ எழுதின கடிதத்தை எல்லாம் தூக்கிக் குடுத்துப் போட்டான். அவன் இஞ்ச வந்து என்னை அவமானப்படுத்திப் போட்டுப் போறான். இஞ்ச பார் பிரேமா சொந்தக் காலில நிண்டு ஐஞ்சு காசு சம்பாதிக்கத் தெரியாதவன் காதலிக்கலாம். கடிதம் எழுதலாம் . ஆனால் கலியாணம் செய்யேலாது. வேணுமென்டா காதல் அவங்களுக்கு ஒரு பொழுதுபோக்கா இருக்கும்."

பிரேமா பிரமித்தாள். தந்தை சொல்வதில் இருந்த உண்மை அவளைச் சிந்திக்க வைத்தது.

"காதலுக்கு கண் இருக்க வேணும். இருந்தால் தான் எதிர்காலத்தைப் பற்றிக் கணிப்புப் போடலாம். நீங்கள் செய்யிறதுக்கு பேர் காதல் இல்லை."

சொல்லி விட்டு வெளியே சென்றார்.

"பிரேமாவை கல்லூரிக்கு போகாமல் நிப்பாட்டினா என்ன" பரேமஸ்வரி கேட்டாள்.

"பயப்படாத பரேமஸ்வரி. இனி அவள் அப்பிடி நடக்க மாட்டாள். உணர்ச்சி அறிவுக்கு திரைபோடும் என்று சொல்லிக் கொடுத்திருக்கிறன்."

விசுவநாதனின் குரலில் மட்டுமல்ல முகத்திலும் திருப்தி தெரிந்தது.



# புலி வேட்டைக்குத் தடை

வேங்கைப் புலிகளுக்கு உலகெங்கும் பெருமதிப்பு இருந்து வருகிறது. இதனால் புலிகளை வளர்த்தால் என்ன என்ற எண்ணம் பலருக்குத் தோன்றாமல் இல்லை.

புலிகளை உலகளாவிய ரீதியில் பாதுகாப்பதற்காக பன்னாட்டு புலிப்பாதுகாப்பு அமைப்பொன்று நிறுவப்பட்டிருக்கிறது.

புலிகளின் எலும்புகளுக்கும் தோலுக்கும் இப்பொழுது நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்தியா உட்பட பல நாடுகளில் கள்ளத்தனமாக புலி வேட்டையாடுவோர், அவற்றின்

அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது என்று பண்ணை நிர்வாகிகள் கூறுகின்றனர்.

அதிக செலவு ஏற்படுவதால் சில புலிகளைக் கொல்வதன் மூலம் வருகின்ற வருமானத்தால் ஈடுசெய்யும் முயற்சியும் இருக்கிறது. ஆனால் அந்த முயற்சிக்கு இதுவரை அனுமதி கொடுக்கப்படவில்லை. அப்படி அனுமதித்தால் சட்ட ரீதியான புலிக்



எலும்புகளை சீனா, தாய்வான் போன்ற நாடுகளுக்குக் கடத்திச் செல்லுகிறார்கள்.

பாம்புப்பண்ணை, முதலைப் பண்ணைகள் போன்று இப்போது புலிப்பண்ணைகளும் பலநாடுகளில் உருவாகத் தொடங்கி உள்ளன.

ஏழு வருடங்களுக்கு முன்னர் சீனாவில் ஒரு புலிப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. இன்று அங்கே 62 புலிகள் இருக்கின்றன. இன்னும் ஏழு வருடங்களில் அவை அறுநூறாகப் பெருகலாம் என்று அந்தப் பண்ணையின் அமைப்பாளர்கள் கூறுகின்றனர். இன்றுள்ள நிலையில் ஒரு புலியை வளர்ப்பதற்கு ஆண்டுக்கு சராசரி 4500

கொலை என்ற போர்வையில், கள்ளத்தனமான புலி எலும்பு வியாபாரம் பெருகும் என்று கருதப்படுகிறது.

இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனப் பிரேதசத்தில் புலிகளின் சரணாலயம் ஒன்று இருக்கிறது. அங்கு புலி வேட்டை தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் புலிகள் மனித வேட்டையாடுவதைத் தடுக்க முடியவில்லை.

வங்காள வேங்கைகள் இந்தியாவிலுள்ள ஏனைய ரகப் புலிகளை விட தோற்றத்திலும், பழக்கவழக்கங்களிலும் வித்தியாசமானவை.

இவற்றின் தலை ஏனைய புலிகளின் தலையை விட அளவில் பெரியவை. ஏனைய புலிகள் மனிதனைப் பின்புறமாக வந்து தாக்குவதில்லை. ஆனால் வங்காளப்புலிகள் மனிதனைப் பின் தொடர்ந்து வேட்டை நடத்துகின்றன.

புலிகள் அதிகமாக வாழும் நாடுகள்:

| | |
|---|---|
| இந்தியா– | 4000 |
| ரஷ்யா– | 500 |
| நேபாளம்– | 300 |
| பங்களாதேஷ்– | 300 |
| சீனா– | 100 |
| மலேசியா– | 600 |
| இந்தோனேசியா– | 500 |

இலங்கை– அந்தப் பெயரில் ஒரு இயக்கம் மட்டும் தான் இருக்கிறது.



# கூத்தரித்த கடி ஜோக்ஸ்

ஒரு வர்:- அதைக் கட்டிப் பிடிச்சு அழமுடியாதே அது தான். ■

நோயாளி:- டாக்டர் நான் இருப்பேனோ, போயிடுவேனோ எண்டு பயமாயிருக்கு.

டாக்டர்:- பயப்பிடாதீங்க. நான் இருக்கிறேன்.

நோயாளி:- நீங்கள் இருப்பீங்கள் டாக்டர், நான் தான் இருக்க மாட்டன். ■

கோபு:- சுப்பர் ஸ்டார் ரஜினி காந்த் ஏன் சிகரட் பிடிக்கிறார்?

பாபு:- அப்பிடியே விட்டிட்டா அது கீழே விழுந்திடுமே அதுதான். ■

சர்வர்:- என்ன கடுமையா யோசிக்கிறீங்க?

சாப்பிட வந்தவர்:- சாப்பிட்ட பிறகு இன்னைக்கு என்ன வேலை தரப்போறிங்களோ எண்டுதான். ■

பி.ஏ.:- நான் எம். எல். ஏ. முருகனோட பி. ஏ. பேசறன். அவர் படம் பாக்க விரும்புறார். உங்க தியெட்டரில என்ன படம் போட்டிருக்கிறீங்க?

தியெட்டர்காரர்:- எங்கடா உங்க எம். எல். ஏ. ■

ஒரு வர்: தாஜ்மஹால் எங்கே இருக்கு?

மற்றவர்: அது அங்கேயே இருக்கு. ■

ஆசிரியர்:- பாரதியார் இப்போ உயிரோடு இருந்தா என்ன பாடியிருப்பார்?

மாணவன்:- என்று தணியும் எங்க குஷ்பு மோகம். ■

அவர்:- எப்ப பாத்தாலும் கையில சில்லறையை வச்சிக்கிருக்கிறீங்களே ஏன்?

மற்றவர்:- வாழ்க்கையில கலகலன்னு இருக்கத்தான். ■

ஆசிரியர்:- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். என் கடிகாரம் தொலைந்து விட்டது. இது என்ன காலம்.?

மாணவன்:- உங்க கெட்டகாலம். சேர். ■

- எங்க கோழி ஒரு நாளுக்கு ஒரு முட்டை வீதம் வாரத்திற்கு ஏழு முட்டை போடும். உங்க கோழி?
- வாரத்திற்கு ஆறு முட்டை தான் போடும்.
- ஏன்?
- அதுக்கு சண்டே ஹொலிடே.

ஒரு வர்:- ரோட்டில ஒரு யானை செத்துக் கிடந்தது. எல்லாரும் அதைத் தொட்டு அழுதிட்டுப் போறாங்களாம் ஏன்?

மற்றவர்:- தெரியல்லையே.




காமன் தொடுக்கும் கணைகள்! சந்தோஷமாக சந்திப்பது எப்படி?

டாக்டர் லவ் சொல்லித்தருகிறார்

"காமம் மட்டுமே காதல் அல்ல–ஆனால் காதலில் காமமும் உண்டு"

டாக்டர் லவ்

காதலர்களின் இனிய நண்பர்.

அடுத்தவாரம்–சந்திக்க தயாராகுங்கள்


## குறுக்கெழுத்துப் போட்டி இல–1

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| | ■ | ■ | 3 | | | |
| | 4 | | | ■ | | ■ |
| | | 5 | | | | |
| 6 | | ■ | | | | |
| ■ | 7 | | ■ | 8 | ■ | |
| 9 | | 10 | | ■ | | 11 |

**இடமிருந்து வலம்**

1. கன்னக் கோல் சாத்து பவன்.
2. இதனைப் பாவித்து இரண்டு மாங்காய்களை விழுத்துபவன் கெட்டிக் காரன்.
3. சமூகத்தில் ஒழுங்கை நிலை நாட்ட இது அவசியம்.
4. குளத்தின் அழுக்கை நீக்கும் பொதுநலப் பறவை.
5. சிறந்த நூல்களைக்கூட இது அரித்து விடும்.
6. இடம் வலமாக மாறி இருக்கிறது) நாடகத்தின் போது இடையில் விழுவதுண்டு.
7. மதம் வந்து விட்டால் அவ்வளவுதான்.
9. உண்மைகளைக் கண்டறியும்வரை இதுதான் நிலவும்.
11. (இடம் வலமாக மாறி இருக்கிறது) அரசர்கள் முன் இதன் உபயத்தில் தான் பலர் பரிசுகள் பெற்றார்கள்.

**மேலிருந்து கீழ்**

1. நட்சத்திரங்களில் ஒன்று.
2. இதனால் உடைக்கவும் செய்யலாம். ஆழமாய்த் தோண்டவும் செய்யலாம்.
3. கோணங்களில் இதவும் ஒன்று.
4. ஆசானுக்கு ஒத்த சொல்.
8. (குழம்பி இருக்கிறது) உலோகங்களில் ஒன்று.
10. (கீழிலிருந்து மேல் இருக்கிறது) வீடு.
11. (கீழிருந்து மேல் இருக்கிறது) குழல் ஊதுவதில் வல்லவன்.

சரியான விடை எழுதும் அதிட்சாலிகள் 25 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பரிசுத்தொகை ரூபாய் 500/-. விடை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 12.06.93.

தினமுரசு வாரமலர்
குறுக்கெழுத்துப் போட்டி-இல-1
88/14, சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-05

# சமைப்போம் சுவைப்போம்

## ஆக்கித் தருபவர் அன்ன பூர்ணா



### மோர் மிளகாய்

காம்பு கிள்ளிய பிஞ்சுப் பச்சை மிளகாய்களை சோகாக வறுத்து நறுக்கிக் கொள்ள வேண்டும். நன்றாகப் புளித்த தயிரில் உப்பைப் போட்டு அதில் மிளகாயை ஊறப்போட வேண்டும்.

தேவைக்கு அதிகமான நீரை இறுத்தி விட வேண்டும்.

பாத்திரத்தோடு அப்படியே வெயிலில் வைத்திருந்தால், அதிகமாக உள்ள நீர் ஆவியாகி மோரும், உப்பும் கட்டியாகப் படிந்து விடும்.

### செலவில்லாத பேப்பர் ரோஸ்ட்

ஒரு கைப்பிடி பழைய சோற்றை மிக்சியில் அரைத்து இட்லி மாவுடன் கலந்து தோசையாக வார்க்கவும். கல்லில் ஒட்டாமல், எண்ணெய் குடிக்காமல் அருமையான பேப்பர் ரோஸ்ட் சுலபமாக வார்க்கவரும்.

### அரிசி இல்லாமல் இட்லி

தேவையான பொருட்கள்:-

உளுத்தம் பருப்பு 1கப்
பயத்தம் பருப்பு 1கப்
தயிர் அல்லது கெட்டியான மோர் அரைகப்
மோர் மிளகாய் 3
ஓமம் 1 டீஸ்பூன்
சமையல் சோடா 1சிட்டிகை
தேவையான உப்பு.

செய்முறை-

இட்லி காலை நேரம் தேவையானால் முன்தினம் உளுத்தம் பருப்பு, பயத்தம் பருப்பைத் தனித்தனியாகத் தண்ணீரில் நனைத்து, சற்றுக் கரகரப்பாகக் கெட்டியாக அரைத்து வைக்கவும். இட்லி வார்க்கும் பொழுது, தயிர்அல்லது மோர், ஓமம், சோடா, உப்புப் பொடி முதலியவற்றைப் போட்டு மோர் மிளகாயை வறுத்துத் தூள் செய்து மாவில் கலந்து சிறிய கிண்ணங்களில் மாவை ஊற்றிக் குக்கரில் வேக வைக்கவும்.

### தேங்காய்ப்பால்

தேங்காயில் இருந்து நிறைய பால் எடுக்க வேண்டுமானால் நல்ல சூடான வெந்நீரைத் தேங்காய்த் துருவலில் விட்டு கொஞ்ச நேரம் மூடி வைத்திருந்து பிறகு பிழிந்தால் தேங்காய்ப் பூவிலிருந்து முழு அளவிற்குப் பால் எடுக்கலாம்.

இரண்டாவது தடவை பால் எடுக்க வேண்டிய அவசியம் இருக்காது.

தேங்காய்ப்பூவைக் கல்லுரலில் இட்டு ஆட்டி நசுக்கிப் பால் எடுத்தாலும் முழு அளவிற்குப் பால் எடுக்கலாம்.

### உருளைக்கிழங்கு வற்றல்

உருளைக்கிழங்கை மெல்லிய வில்லைகளாக நறுக்கி வெயிலில் ஈரம் போக உலர்த்தி வற்றலாகச் செய்து சேமித்து வைத்துக் கொள்ளலாம்.

தேவைப்படும் போது, எண்ணெயில் பொரித்து உப்பு, மிளகாய்ப்பொடி தூவி துணைப் பதார்த்தமாக உபயோகிக்கலாம். உருளைக்கிழங்கு வற்றலாகவே கடைகளில் விற்கப் படுவதும் உண்டு.

- ■ புளித்த தோசைமாவில் சுக்குப் பொடி கலந்து ஊத்தப்பம் செய்தால் எளிதில் ஜீரணமாகும்.■
- ■ உப்புமா தாளிக்கும் போது கிராம்பும் சிறிது இலவங்கப் பட்டையும் (கறுவா) போட்டுத் தாளித்தால் உப்புமா சாப்பிடாதவர்கள் கூட சாப்பிடுவார்கள்.■
- ■ துண்டு துண்டாக இருக்கும் ஐஸ் கட்டியை பிளாஸ்க்கினுள் பத்திரப்படுத்த விரும்பினால் பிளாஸ்கை செங்குத்தாக நிறுத்தி ஐஸ் கட்டிகளை அதனுள் போடக்கூடாது. பிளாஸ்க்கை லேசாகச் சரித்து அதனுள் வழுக்கிக் கொண்டு போகும் வகையில் ஐஸ் கட்டிகளை அதனுள் போட வேண்டும்.■




www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தூரத்து நாகரிகம்



## அழகியின் கனவு

பராகுவா என்னும் நாடு மத்திய அமெரிக்காவில் இருக்கிறது. அந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் பலரின் அந்தரங்க விளையாட்டுகளை அம்பலப் படுத்தும் புத்தகம் ஒன்று எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வெளிவர இருக்கிறது.

அந்த புத்தகத்தை எழுதி இருப்பவர் வெரோனிக்கா கவரினோ என்கின்ற 26 வயது அழகி. அவள் ஓர் உயர் அதிகாரியின் அந்தரங்க நாயகியாக இருந்தவள். அவரது ரகசியங்கள் அம்பலத்துக்கு வரும் போது யார் அந்த உயர் அதிகாரி என்ற தகவலும் வெளியாகும்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட பராகுவா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அல்பிரெடோ ஒரு பெண் பித்தராம். இளம் பெண்களை அடைவதற்காக அவர் எதையும் செய்யத் தயாராக இருந்தார். இதுவும் அந்த அழகியின் வாக்குமூலம் தான்.

அந்த அழகிக்கும் ஒரு கனவு இருக்கிறது. அது ஒன்றும் பெரிய கனவல்ல. தான் பராகுவா நாட்டின் ஜனாதிபதியாக வேண்டுமாம். அழகு வெல்லுமா, காதல் அரசியின் கனவு பலிக்குமா? யார் கண்டது.

## அதிர வைக்கும் அந்தரங்க நாட்குறிப்பு

ஏறக்குறைய 80 லட்சம் தொலைக்காட்சி இரசிகர்கள் அதிர்ந்து தான் போனார்கள். காதல் சிட்டுகளான ஜினியும், டெவின் எட்வேர்ட்டும் தங்கள் பள்ளியறை லீலைகளை பகிரங்கமாக விவரித்தார்கள்.

தங்களது இருபது வருட தாம்பத்திய வாழ்க்கைக்கு பாலமாக இருப்பது காதல் லீலைகள் தான் என்று அவர்கள் ஒளிவு மறைவு இல்லாமல் ஒப்புக் கொண்டார்கள்.

நாளொன்றுக்கு நான்கு தடவைகள் தாம் ஓருடலும் ஈருயிருமான நிலைக்குச் சென்று விடுவதாக அந்தத் தம்பதிகள் தெரிவித்தனர்.

38 வயதான டெவின் தனது துணைவியைப் பற்றிக் கூறும் போது நாளாக நாளாக அவள் மீது ஆசை அதிகமாகிறது. அவள் என்னை மேலும் மோகம் கொள்ளத் தூண்டுகிறாள் என்கிறார்.

ஜினி தன் கணவனைப் பற்றிச் சொல்லும் போது, என்னை ஒரு பாலியலைத்தூண்டும் பாவையாக அவர் கருதுகிறார். உலகில் அவரால் அதிகம் விரும்பத் தக்கவள் நான் தான் என்று பெருமையோடு சொல்லுகிறார்.

தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்மணி ஒருவர் (தொலைக்காட்சி நிலையத்தில்) டெவின் எப்போதும் இப்போது போலவே சிரித்துக் கொண்டு இருப்பாரா என்று கேட்டார்.

ஆமாம். அவர் எப்போதும் இதே சிரிப்போடு இருப்பார். என்று கூறினார் ஜினி.

இந்தக் காதல் தம்பதியினரின் அன்றாட நாட்குறிப்புச் சுவையானது அந்த நாட்குறிப்பின் சில பக்கங்களை புரட்டுவோம்.

**காலை நாலுமணி**

டெவின் தனது துணைவி ஜினியை அன்பாக அணைத்துக் கொண்டு, உடல் அனைத்தையும் வருடிக் கொடுத்து பின்னர் கூடலை ஆரம்பிக்கிறார்.

**காலை ஐந்து மணி**

டெவின் தனது தொழிலுக்கு செல்லுகிறார். ஜினி தன் தூக்கத்தை தொடர்கிறார்.

**காலை 7.30**

ஜினி தனது தொழிலகத்துக்குச் செல்லுகிறாள். அங்கு தான் டெவினும் வேலை செய்கிறார். 'பதுங்கிச் சென்று அவரின் பின்புறமாக மெல்லக் கிள்ளுவேன்' என்று சொல்கிறாள் ஜினி. தினமும் ஒரே அலுவலகத்தில் அவரது அருகில் பணி புரிவதையே பெரிதும் விரும்புவேன் என்கிறாள்.

அதே தான் டெவினும் சொல்லுகிறார். 'உங்கள் மனைவி எப்போதும் உங்கள் அருகில் இருப்பது பெருமைக்குரியது. கடுமையான ஒரு பணியில் நீங்கள் ஈடுபட்டு இருக்கும் போது அவள் உங்கள் அருகில் வந்து உங்களை அணைத்தாலோ, அல்லது முதுகில் சாய்ந்து கட்டியணைத்தாலோ அன்றைய தினத்திற்கு தனி உற்சாகத்தை அது ஊட்டி விடும்.' என்றார்.

**மதியம் 1.30**

அன்று பணிகள் குறைவாக இருக்குமானால் இருவரும் இணைந்தே வீடு திரும்புகின்றனர். அவ்வாறு செல்லும்போது வேறு வாகனங்கள் அருகில் வரவில்லையானால் அவரைக் கவர்ந்திழுக்க நான் ஒரு காரியம் செய்வேன் என்கிறாள் ஜினி. அது என்ன காரியம்? அது அடுத்த வாரம்.



## அமெரிக்க இராணுவம் பயன்படுத்திப் பார்க்கும்!

எய்ட்ஸ் நோய் ஆட்கொல்லி நோயாக உலகை அச்சுறுத்தி வருகிறது.

விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் தலைமுடியைப் பிய்த்துக்கொள்கிறார்கள். ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. முயற்சி - முயற்சி - முயற்சி.

அமெரிக்காவில் எய்ட்ஸ் நோய்க்கான புதிய மருந்தொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வைரஸ் கிருமியின் மேல் ஒட்டியிருந்தே அந்த மருந்து தயாரிக்கப் பட்டுள்ளது. அந்த மருந்தை அமெரிக்க இராணுவம் பரீட்சிக்க வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் பணித்துள்ளது.

கடந்த வருடம் அமெரிக்க பாதுகாப்புத் துறையில் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களின் படிதான் அந்த உத்தரவு வழங்கப் பட்டுள்ளது. இத்தகவல்களை வாசிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள சமஸ அச்சகத்தில் ஜூன் மாதம் 6ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.